விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 25 சனிக்கிழமை (09.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 021

## மாட்டுடன் மோதுண்ட குடும்பஸ்தர் மரணம்



**கிளிநொச்சியில் சம்பவம்**

(கிளிநொச்சி)
மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த போது மாட்டுடன் மோதி விபத்துக்குள் 19

## எழுமாற்று பரிசோதனையில் 55 பேருக்கு வவுனியாவில் கொரோனா

### வடக்கில் மற்றுமொரு கொத்தணி மேலும் பலருக்கு தொற்றிருக்கலாம்

வவுனியா நகரில் எழுமாற்றாக வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், பணியாளர்கள் உள்ளிட்டோரிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 55 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
(08ஆம் பக்கம் பார்க்க)

## நகை களவு போனதால் விபரீத முடிவெடுத்த இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)
விபரீத முடிவெடுத்து இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். நல்லூர்ப் பகுதியைச் சேர்ந்த நாகரத்தினம் மதன் (வயது-32) என் 19

## முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்து அழிப்பு

### ராஜபக்ஷ அரசு அராஜகம்

யாழ்.பல்கலையில் அமைக்கப்பட்ட





(யாழ்ப்பாணம்)
யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவிடம் இரவோடு இரவாக இடித்து அழிக்கப்பட்டுள்ளது. ராஜபக்ஷ அரசின் உத்தரவின்பேரில் பல்கலைக்கழக நிர்வாகத்தால் மின்குமிழ்கள் அணைக்கப்பட்டு ஜே.சி.பி இயந்திரத்தினைப் பயன்படுத்தி நேற்று இரவு நினைவுத்தூபி இடித்து அழிக்கப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)



## மூச்சுத் திணறலால் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
சாப்பிடும்போது உணவு தொண்டைக்குள் சிக்கியதால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் சங்கானையைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி பார்த்தீபன் (வயது-42) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான விசாரணையை யாழ். போதனாவின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)



## யாழ்.பல்கலைக்கு முன்பாக பொதுமக்கள், மாணவர்கள் போராட்டம் இராணுவம், பொலிஸ் குவிப்பு

### இரு மாணவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள் 19

## முள்ளிவாய்க்கால் நினைவு தூபி உடைக்கப்பட்டது ஏன்?

### துணைவேந்தர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண பல்கலைக் கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த 19



## தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்த வைத்த அதே காரணங்களை ராஜபக்ஷ அரசு உருவாக்குகின்றது

### உங்களை பொறுத்தவரை நாம் வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள்

**பாராளுமன்றில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் முழக்கம்**

(கொழும்பு)
கடந்த காலங்களில் எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்ட, அதே காரணங்களையே கோட்டா அரசு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இது இலங்கையிலுள்ள சகல மக்களிற்கு 19

## மருதனார்மடம் கொத்தணி மேலும் ஐவருக்கு கொரோனா

### மன்னாரிலும் இருவருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
மருதனார்மடம் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் கொத் தணியில் 19

## கொரோனாவால் நாட்டில் மேலும் மூவர் மரணம்

## நாய் குறுக்கே பாய்ந்ததில் வீதி விபத்துக்குள்ளான குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ் நாய் குறுக்கே பாய்ந்ததில் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
20.02.1983

மறைவு
06.01.2021

அமரர்

## கணபதிப்பிள்ளை ஜனாதீபன்

( யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக பராமரிப்புக்கிளை மேற்பார்வையாளர் )

எமது நண்பன் கனபதிப்பிள்ளை ஜனாதீபன் அவர்கள்
காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன்
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

யாழ். இந்துக் கல்லூரி 2002 நண்பர்கள் (5231)


# கிராம உத்தியோகத்தர் தனிமைப்படுத்தப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பொற்பதி கிராமத்தில் தனிமைப்படுத்தலில் ஈடுபடுத்தப்பட்டிருந்த குடும்பத்தாரின் வீட்டில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண் கிராம அலுவலர் ஒருவர் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார் என நேற்று வலம்புரியில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

எனினும் குறித்த கிராம உத்தியோகத்தர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)


**மணமகன் தேவை**

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த
1976 ஆம் ஆண்டு பிறந்த
குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை
புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை
பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு
070 640 5951
e-mail : engchelvam@gmail.com
(5220)



# கண்ணீர் அஞ்சலி



கிளிநொச்சி மாவட்ட
சாரணிய உதவி மாவட்ட
ஆணையாளர்
திரு. சி. விக்னேஸ்வரன்
அவர்களின்
பாசமிகு தாயார்
அமரர்
**கனகம்மா சிதம்பரப்பிள்ளை**
அவர்களின் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திப்பதோடு
அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாரணர் சங்கம்
கிளிநொச்சி மாவட்டம்
(5227)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# மரண அறிவித்தல்

## நடனராணி சிவநாயகம்

**தோற்றம் : 27.01.1939 மறைவு : 07.01.2021**



காரைநகர், புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் கோலாலம்பூர், மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது மூத்ததம்பி ஒழுங்கை, மானிப்பாயில் வசித்து வந்தவருமான திருமதி நடனராணி சிவநாயகம் கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவநாயகம் - சிவசம்புவின் (இறப்பர் ஆராய்ச்சி நிலையம் - மலேசியா, காரைநகர் சந்தம்புளியடி ) அன்பு மனைவியும் காலஞ்சென்ற குணநாயகம் - முத்தாபரணம் தம்பதியரின் (காரைநகர், புதுறோட்) மூத்தமகளும் குணநாயகம் இராசநாயகம் ( முன்னாள் அதிபர் -யாழ்ப்பாணக் கல்லூரி ), இந்திராணி ஜெயக்குமாரன் ( முன்னாள் உப அதிபர் - யாழ்ப்பாணக் கல்லூரி ) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராஜேஸ்வரி ராசநாயகம், வண.பிதா ஜெயக்குமாரன் ஆகியோரின் மைத்துனியும் டாக்டர் டிலானி ஜெயக்குமாரன், டாக்டர் டினேஸ் ஜெயக் குமாரன், டிலக்சன் ஜெயக்குமாரன் (கணக்காளர்) ஆகியோரின் பெரியம்மாவும் ராஜினி வைமன், ரிறோன் வைமன், ராஜ்மோகன் ராசநாயகம், டாக்டர் றோசினி ராஜ்மோகன், ராஜ்குமார் ராசநாயகம், டாக்டர் சரோன் ராஜ்குமார், வைதேகி டினேஷ், பிரியாந்தி டிலக்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ரஸ்மிதா வைமன், திமொத்தி வைமன், ரித்திக்கா ராஜ்மோகன், ரச்சித்தா ராஜ்மோகன், ரிசான் ராஜ்குமார், ரமித்தா ராஜ்குமார், கேசியா டினேஷ், கிறேசியா டினேஸ், நிதன் டிலக்சன், நிலானி டிலக்சன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

இறுதி அஞ்சலிக்காக அன்னாரின் உடல் இல. 12, மூத்ததம்பி ஒழுங்கையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நாளை (10.01.2021) ஞாயிற்றுக்கிழமை காலை முதல் வைக்கப்பட்டு அன்றையதினம் மாலை 3.00 மணிக்கு நல்லடக்க ஆராதனை நடைபெற்று மானிப்பாய் கிறிஸ்தவ கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு : - தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அஞ்சலி செலுத்த வருவோர் பரிந்துரைக்கப்பட்ட சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(5229)

இல. 12, மூத்ததம்பி ஒழுங்கை,
மானிப்பாய்.

தகவல்:
இந்திராணி ஜெயக்குமார்
077 754 3368
(சகோதரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவை சாட்டாக வைத்து சிவில் நிர்வாகத்தை இராணுவம் அபகரித்துள்ளது-ஜஸ்மின் சூக்கா குற்றச்சாட்டு

**(கொழும்பு)**

**போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு முகங்கொடுக்கும் இராணுவ அதிகாரிகளை வெள்ளையடிப்பதற்கு இலங்கையானது கொரோனா வைரஸ் பரவலைப் பயன்படுத்துகின்றது என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் தெரிவித்துள்ளது.**

அந்த அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

'போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐ.நாவினால் பெயரிடப்பட்ட மற்றும் பாரிய மனித உரிமைகள் மீறல்களுக்காக அமெரிக்க அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட ஒரு ஜெனரல் கொரோனாவைத் தடுப்பதற்கான நாட்டினுடைய தேசிய நடவடிக்கைகள் மையத்திற்கு பொறுப்பாக உள்ளார் என்பது மட்டுமல்ல கடந்த வாரம் வரை 2009 இல் இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் சண்டை அனுபவத்தை கொண்டவர்களை அநேகமாக கொண்ட இருபத்தைந்து அதிகாரிகள் நாடு முழுவதும் பொதுமக்களின் சுகாதாரத்திற்குப் பொறுப்பாக போடப்பட்டுள்ளார்கள்.

முன்னர் வேண்டுமென்றே குண்டுத்தாக்குதல்கள் மற்றும் எறிகணைத்தாக்குதல்களை மேற்கொண்ட, வைத்தியசாலைகள் மீது தாக்குதல் மேற்கொண்ட, மக்களைப் பட்டினிபோட்ட, உயிர் காக்கும் மருந்துகளை மறுத்த அதே இலங்கை இராணுவ அதிகாரிகள் தற்போது மக்களின் சுகாதாரத்தைப் பாதுகாப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவர்களது நியமனமானது



கொரோனா அவசரகால நிலையைப் பயன்படுத்தி கறைபடிந்த அமைப்பினை சுத்தம் செய்யும் ஒரு இழிவான முயற்சியாகும்.

அத்துடன் இதற்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது தொடர்பாக சர்வதேச சமூகத்திற்கும் இது ஒரு பாரதூரமான பிரச்சினையை ஏற்படுத்துகின்றது.

இராஜதந்திரிகளும் நன்கொடை வழங்கும் நாடுகளும் சிவில் நிர்வாகம் அகற்றப்பட்டு வலுவற்றதாகச் செய்யப்படும் இந்தச் செயற்பாட்டிற்கு துணைபோகக்கூடாது. கொரோனா நிலைமையைக் கையாள்வதற்கு மாவட்ட இராணுவ இணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள 25 இராணுவ அதிகாரிகளில் குறைந்தது 16 பேர் 2008-2009 சிவில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற சண்டைகளில் தொடர்புபட்டிருந்தார்கள்.

ஐ.நா.அமைதிகாப்பு படை நடிவடிக்கைகளில் இருந்தும் தடுக்கும் அதேவேளையில் நகை முரணாக இந்த அதிகாரிகள் தாம் போரில் தோற்கடித்தவர்களை தாம் அடக்கியாளும் பிரதேசங்கள் உட்பட பொதுமக்களின் சுகாதாரத்தை மேற்பார்வை செய்பவர்களாக இருக்கின்றார்கள்.

2009 இல் வேண்டுமென்றே பொதுமக்கள் இலக்குகளை இலக்கு வைத்தல், கூட்டாகப் படுகொலை செய்தல், வலிந்து காணாமல் போதல்கள், பாலியல் வன்புணர்வு மற்றும் சித்திரவதைகளில் தொடர்புபட்டிருந்தமையையும் அத்துடன் தேவையான உணவுப்பொருட்கள், மருந்துப் பொருட்கள், உயிர் தப்புவதற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் விநியோகங்கள் போர் வலயத்திலுள்ள தமிழ் பொதுமக்களை சென்றடைவதை வேண்டுமென்றே மறுத்தல் மற்றும் தடுத்தல் போன்றவற்றிலும் இராணுவம் கருவியாக இருந்துள்ளது என்பதை காட்டும் நியாயமான ஆதாரங்கள் உள்ளன.

போரில் பொதுமக்களின் உயிர்கள் மற்றும் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் சர்வதேச சட்டங்களை மீறியிருக்கும் இந்த இராணுவத்தினரில் சிலர் தற்போது நாட்டினுடைய சுகாதாரத்திற்குப் பொறுப்பாக உள்ளனர் என்பது முடிவான அவமதிப்பாகும்.

சிவில் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இராணுவ கட்டளையதிகாரிகளை நாடு முழுவதும் போடுதல் தற்போது இருக்கும் அரசாங்க அதிகாரிகளின் அதிகாரத்தினை இரத்துச் செய்வதாக உள்ளது.

சுகாதாரம் தொடர்பான அவசரநிலை ஒருபோதும் ஜனநாயகத்தை அழிப்பதை நியாயப்படுத்தாது. ஊழலில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில் பல முக்கிய அதிகாரிகள் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட ஒரு அரசாங்கத்தினுள் கொரோனாவை எதிர்த்துப் போராடுவதற்காக வடிவமைக்கப்பட்ட சர்வதேச உதவியில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பிலான பாரதூரமான கேள்விகள் உள்ளன.

மிகவும் இராணுவமயப்படுத்தப்பட்ட அரசாங்கமானது தனது அதிகாரத்தினை நிலைநிறுத்துவதற்கும் இறந்தவர்களைப் புதைப்பதற்கான தமது உரிமை சட்ட ரீதியற்ற முறையில் மறுக்கப்பட்ட முஸ்லிம்கள் போன்ற சிறுபான்மையினரின் உரிமைகளை மீறுவதற்கும் ஏற்ற ஒரு மறைப்பாக கொரோனா வைரஸ் மாறியிருக்கின்றது" என சூக்கா தெரிவித்தார்.

சுகாதாரப் பராமரிப்பு பற்றிய நிபுணத்துவம் அரிதாக இருந்தும் அதனை வழங்குதல் என்ற போர்வையின் கீழ் இலங்கை இராணுவம் சிவில் நிர்வாகப் பொறுப்பினை மெதுவாக அபகரித்துக் கொண்டுள்ளது. இது நீண்ட காலப் பாதிப்பினை ஏற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## 24 மணி நேரமும் இயங்கும் 1927

(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள் பாவனைக் குட்பட்டவர்களை விடுவிப்பதற்காக 1927 தொலைபேசி இலக்க சேவை 24 மணி நேரமும் இயங்கும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

கொவிட்-19 தொற்றுச் சூழ்நிலை காரணமாக போதைப் பொருள் பாவனையினால் அவதிப்படுவோர் அதிலிருந்து விடுபடுவதற்கு ஏதுவான உளவள ஆலோசனை, சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு போன்றவற்றுக்குத் தேவையான உளவளத்துணையினை 24 மணித்தியால சேவையினூடாகச் பெற்றுக்கொள்வதற்கு தேசிய ரீதியில் தொலைபேசி இலக்கம் 1927 அறிமுகம் செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (5)

## பல்கலை.மானியங்கள் ஆணைக்குழு மூடப்பட்டது

(கொழும்பு)

கொவிட் - 19 தொற்றுறுதியான ஒருவர் அடையாளம் காணப்பட்டதை அடுத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (நி-4)

## மேலதிக வகுப்புகள் நடத்தப்படுமா?



(கொழும்பு)

சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக அனுமதி கிடைக்கப்பெற்றால் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் மேலதிக வகுப்புக்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படும் என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கையிலேயே கல்வி அமைச்சர் இதனை தெரிவித்தார். இலங்கையில் மாத்திரமின்றி அனைத்து உலக நாடுகளிலும் கொரோனாவின் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது.

இதனால் அனைத்து நாடுகளும் மாணவர்களின் நலன் கருதி கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. எனினும் கட்டம் கட்டமாக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் வகையில் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் மேலதிக வகுப்புகளை நடத்த அனுமதி வழங்கப்படும் என அமைச்சர் சுட்டிக் காட்டினார். (நி-4)

# இலங்கை விவகாரங்களில் ஒருபோதும் இந்தியா உத்தரவிட முடியாது - வீரசேகர எச்சரிக்கை

**(கொழும்பு)**

**இலங்கை சுயாதீனமான நாடு என்ற ரீதியில் இந்தியா இலங்கைக்கு யோசனைகளை மாத்திரமே முன்வைக்க முடியுமே தவிர உத்தரவிட முடியாது என இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அமைச்சர் சரத் வீரசேகர மேலும் கூறியுள்ளதாவது, "தேசிய சொத்துக்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளிநாட்டினருக்கு விற்பனை செய்வதற்கு இடமளிக்கப்படாது.

ஆகவே தேசிய சொத்துக்கள் ஏனைய தரப்பினருக்கு விற்பனை செய்யப்படுவதாக முன்வைக்கப்படும் கருத்துக்கள் குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

மேலும், தேசிய சொத்துக்களை விற்பனை செய்யும் நடவடிக்கைக்கு எதிராகவே அரசாங்கம் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

இதேவேளை, 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு வற்புறுத்துவதற்கு இந்தியாவுக்கு எந்தவொரு உரிமையும் கிடையாது.

இலங்கை சுயாதீனமான நாடு என்ற ரீதியில் இந்தியா இலங்கைக்கு யோசனை திட்டங்களை மாத்திரமே முன்வைக்க முடியும். அதற்கு மாறாக இலங்கைக்கு எந்தவொரு விடயத்திலும் உத்தரவிட முடியாது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிநேகபூர்வ வெற்றிக் கிண்ணம்-2020 ஓல்ட்கோல்ஸ் அணி இறுதிக்கு தெரிவு



**AB,** விக்ரோரியன்ஸ், ஓல்கோல்ஸ் ஆகிய 3 கழகங்களும் இணைந்து நடத்தும் சிநேகபூர்வ வெற்றிக் கிண்ணத்திற்காக மட்டுப்படுத்தப்பட்ட 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட தொடரில் இறுதியாக நடைபெற்ற நான்காவது போட்டியில் ஓல்கோல்ஸ் அணி யூனியன்ஸ் அணியை 53 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்கோல்ஸ் அணி 30 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களை பெற்றது.

மதூஸன்-28, நிரோஸன்-14, பிரியலகஸன்-10, சிறிகுகன்-15, ஜின்துஸன்-14 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் யூனியன்ஸ் சார்பாக ரகுபதி-03, மோகன் ராஜ்-02, சுஜன்தன், ஜான்சன், தர்ஸன், மகீன்தன் தலா-01 விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 24.4 ஓவர்களின் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 85 ஓட்டங்களை பெற்றனர்.

ஆகீசன் -12, சுயன்தன்-35, ரகுபதி-10 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் ஓல்கோல்ஸ் அணி சார்பாக ஜின்துஸன்-04, சிந்துஜன்-02, பிரியலக்ஸன்-01, கஜேந்திரன்-03 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். (4)

# ஸ்ரீ முருகன் பிறீமியர் லீக்




ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தால் முதல் முறை ஸ்ரீமுருகன் பிறீமியர் லீக் தொடர் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இத் தொடரில் துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கரம், கயிறு இழுத்தல் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

மேலதிக விடயங்கள் கழக கூட்டத்தில் ஆராயப்பட்டு தெரிவிக்கப்படுமென ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுகழக நிர்வாகம் அறிவித்துள்ளது. (4)

# இந்தியன் சுப்பர் லீக் ஒடிசா அணி வெற்றி

இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து போட்டியின் 50 ஆவது லீக் ஆட்டத்தில் ஒடிசா அணி 4-2 என்ற கோல் கணக்கில் கேரளா பிளாஸ்டர்சை வீழ்த்தியது.

7 ஆவது இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து போட்டி தொடர் கோவாவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் இரவு நடந்த 50 ஆவது லீக் ஆட்டத்தில் கேரளா பிளாஸ்டர்ஸ்-ஒடிசா எப்.சி. அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

பரபரப்பாக அரங்கேறிய இந்த ஆட்டத்தில்ஒடிசா அணி 4-2 என்ற கோல் கணக்கில் கேரளா பிளாஸ்டர்சை வீழ்த்தியது. (4)

# ஆண்களுக்கான கிரிக்கெட்டில் முதல் பெண் நடுவர்



அவுஸ்திரேலியாவை சேர்ந்த தொழில்முறை கிரிக்கெட் நடுவரான கிளாரி பொலோசக், ஆண்களுக்கான டெஸ்ட் கிரிக்கெட்டில் பணியாற்றிய முதல் பெண் நடுவர் என பெருமையை பெற்றுள்ளார்.

144 ஆண்டுகால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஆண்களுக்கான டெஸ்ட் கிரிக்கெட்டில், பெண் ஒருவர் நடுவராக பணி புரிவது இதுவே முதல் முறையாகும்.

சிட்னி மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியில், 32 வயதான கிளாரி பொலோசக், நான்காவது நடுவராக இணைந்தார். (4)

# மைதானத்தில் மயங்கி விழுந்து கால்பந்து வீரர் மரணம்



விளையாடும்போது மைதானத்தில் மயங்கி விழுந்த 24 வயது பிரேசில் கால்பந்து வீரர் மாரடைப்பால் மரணமடைந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரேசில் நாட்டைச் சேர்ந்த 24 வயதான கால்பந்து வீரர் அலெக்ஸ் அபோலினாரியோ கடந்த ஞாயிற்றுக்கிழமை போர்த்துக்கல் **FC Alverca** அணிக்காக விளையாடிக் கொண்டிருந்த வேளை 27 ஆவது நிமிடத்தில் திடீரென மைதானத்திலேயே மயங்கி விழுந்தார்.

அவரை **Vila Franca de** Xira வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அன்றிரவே அவர் சுயநினைவுக்குத் திரும்புவார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் அவருக்கு மூளைச்சாவு ஏற்பட்டதால், சிகிச்சை பலனின்றி மரணமடைந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தார்.

அலெக்ஸுக்கு இரங்கல் தெரிவிக்கும் விதமாக FC Alverca அணி தனது அனைத்து பணிகளையும் தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.

மேலும் அவரது குடும்பத்திற்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்படும் என்றும் உறுதி அளித்துள்ளது. (4)

# சர்ச்சையில் சிக்கிய விராட்



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஸ்பொன்சர் நிறுவனத்தில் விராட் ஹோலி முதலீடு செய்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் 3 நிலைக்கும் கப்டனாக விராட் ஹோலி செயற்படுகிறார். உலகின் தலைசிறந்த பேட்ஸ்மேனான அவர், விளம்பர வருமானம் மூலம் கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்கிறார். இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் ஸ்பொன்சர் நிறுவனத்தில் விராட் ஹோலி முதலீடு செய்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பெங்களூரை தலைமை இடமாகக் கொண்டு கேலக்டஸ் பன்வேர் டெக்னாலஜி நிறுவனம் செயற்படுகிறது. ஒன்லைன் விளையாட்டு செயலியான மொபைல் பிரீமியர் லீக் இந்த நிறுவனத்துக்கு சொந்தமானது. இதில் விராட் கோஹ்லி விளம்பர தூதராகவும் இருக்கிறார். மேலும் அந்த நிறுவனத்தில் முதலீடும் செய்துள்ளார்.

இது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. விராட் ஹோலி 2019 ஆம் ஆண்டு பெப்ரவரியில் இருந்து அந்த நிறுவனத்தில் முதலீடு செய்திருக்கிறார். இந்த தகவல் தற்போதுதான் வெளியாகி இருக்கிறது. இந்த விவகாரம் தொடர்பாக கிரிக்கெட் வாரியம் விராட் ஹோலியிடம் விளக்கம் கேட்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## 35ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம்-2021
## பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கம்

பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு கல்வியாண்டு 2016-2017 மற்றும் 2017/2018 இல் பட்டம் பெற்ற விவசாய, பிரயோக விஞ்ஞான, பொறியியல் மற்றும் விஞ்ஞான பீடங்களைச் சேர்ந்த தூய, பிரயோக விஞ்ஞானப் பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை:-

எதிர்வரும் 35ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறவிருக்கும் விஞ்ஞானம், விவசாயம் மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் நான்கு வருட இளமாணிப்பட்டம் அளிக்கப்படவிருக்கும், முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மேற் பிரிவில் சித்தியடைந்தவர்கள் தங்கப் பதக்கத்திற்கு தகுதியுடையவராகக் கருதப்படுவர்.

விண்ணப்பப்படிவங்களை கீழ்க் காணும் ஒரு முகவரியில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

1. உதவிப்பதிவாளர்,கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. பிரதிப் பதிவாளர்,பரீட்சைகள் மற்றும் மாணவர் சேவைகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம், வவுனியா.
3. இணையத்தளம்: **www.jfn.ac.lk**

முடிவுத்திகதி: 27.01.2021 (புதன்கிழமை)

முக்கிய குறிப்பு:- சரியான, பொருத்தமான தகவல்களை உள்ளடக்காதவையும், தெளிவற்றவையும், பூரணப்படுத்தப்படாதவையும் மற்றும் முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுபவையுமான விண்ணப்பங்கள் யாவும் கருத்திற் கொள்ளப்படமாட்டா.

(c-1117) **பதிவாளர்.**

## சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## விண்ணப்பம் கோரல்

சங்கத்தினால் பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தினை ரூபா.20/ செலுத்தி பெற்று பூரணப்படுத்தி பிறப்புச் சான்றிதழ், கல்வித்தகைமைச் சான்றிதழின் பிரதிகளுடன் 25.01.2021 ஆம் திகதிக்கு முன்னதாக "பொதுமுகாமையாளர், சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து), கண்டி வீதி, சாவகச்சேரி" எனும் முகவரிக்கு தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடது பக்க மேல்முலையில் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பதவி : விற்பனை உதவியாளர் தரம் 308/17
சம்பளக் குறியீட்டு இல : 308/17 (சுற்.நிரு இல: 165/88 இன்படி)
சம்பள அளவுத்திட்டம் : ரூபா 14725 - 115 X10-ரூபா 17175 (சுற்று நிருப இல. 04/2018)

சங்கம் இலாபத்தில் இயங்கும் மாதங்களில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கு அமைய படிகளும் வழங்கப்படும்.

தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தரச்சான்றிதழ்

அல்லது

ஆ) 08 ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

வயது 18 தொடக்கம் 45 வரை (சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது)

சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வேறு கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களின் சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

இப்பதவிக்கு விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுமிடத்து ரொக்கப்பிணை சங்கத்தில் செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**
**சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்,**
**கண்டி வீதி, சாவகச்சேரி.**
(c-1120)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.
**இராசையா பரமேஸ்வரி**

பிறரை வாழ வைத்த மங்கையே!
கோபத்திலும் அன்பை
காட்டும் தேவியே!
உம் சிரிப்பில் ஆழ்ந்த எங்களால்
உம் மறைவில் இருந்து
மீள முடியவில்லை!

ஓராண்டு கடந்தாலும்
நெஞ்சில் ஈரம் காயவில்லை!
ஆண்டு தோறும்
நினைவஞ்சலிகள்
நாம் செய்தாலும்
இன்பத்திலும் துன்பத்திலும்
நாளும் உம் நினைவுகள்
எம்மில் உண்டு...
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி நிற்கின்றோம்



திதி: 09.01.2021

**பிறப்பு: 03.06.1940**
**இறப்பு: 22.12.2019**

**கோட்டைக்காடு, மல்லாகம்.** (5210) **குடும்பத்தினர்.**

# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs.In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1) | Construction of New Store near RHO Quarters | 500.00 | 63,000.00 | 91 | 3.11 | C8 |
| 2) | Construction of Stores at Hospital Back side land. | 500.00 | 52,000.00 | 91 | 2.57 | C8 |
| 3) | Extension of Washing Machine Room. | 500.00 | 27,000.00 | 91 | 1.34 | C9 |
| 4) | Renovation of Driver's Duty Room,Extension and Modification of Gate near HO Quarters & Ceiling work for X-Ray Unit fot A & E Building. | 500.00 | 22,000.00 | 91 | 1.07 | C9 |
| 5) | Construction of Patient Waiting shed Cubical Curtin, Aluminium works at ward No 18 and Supply and Fixing of Curtins at RHO Quarters. | 500.00 | 19,000.00 | 91 | 0.92 | C9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB)
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in english Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 11.01.2021 up to 26.01.2021 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 am on 27.01.2021, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
(c-1119)

# 31 ஆம் நாள் நினைவுதினம்

**தோற்றம்** 08 - 12 - 1972



**மறைவு** 11 - 12 - 2020

அமரர். **புஸ்பரூபி சந்திரகுமார்**

கடந்த 11.12.2020 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் எய்திய எமது அன்புத்தெய்வத்தின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 10.01.2021 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 05.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி ஊறணி புனித நீரில் கரைக்கப்படும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்திபெற வேண்டுவதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**புலவர் வளவு துவாளி வீதி,**
**இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.**
(c-1114)

**குடும்பத்தினர்.**
**077 943 4082,**
**077 543 1999**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தார் பரல்களையும் விட்டு வைக்காத திருடர்கள்

(சாவவகச்சேரி)

சாவகச்சேரி-சங்கத்தானைப் பகுதியில் உள்ள சப்பச்சிமாவடிப் பிள்ளையார் வீதி செப்பனிட வைக்கப்பட்டிருந்த எட்டு தார் பரல்கள் கடந்த சனிக்கிழமை இரவு களவு போயிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சப்ரிகம திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டு வீதி வேலைகள் இடம்பெற்று வந்த நிலையில் மறுதினம் தார் வார்ப்பதற்காக வீதி ஓரத்தில் பறிக்கப்பட்டிருந்த தார் பரல்களே இவ்வாறு களவு போயுள்ளன. இது தொடர்பில் ஒப்பந்தகாரர்களால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. களவு போயிருக்கும் தார் பரல்களின் பெறுமதி ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் எனத் தெரிவிக்கப்படுகிறது.(5-4-30)



யாழ்.வணிகர் கழகத்தின் அழைப்பை ஏற்று யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் நகர பகுதியில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் நேரடியாக விஜயத்தை மேற்கொண்டு அறிந்து கொண்டார். (படம்:- கரணவாய்)

# மத்தியஸ்தர் சபை இன்று

(யாழ்ப்பாணம்)

கொவிட்-19 தொற்று காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த மத்தியஸ்தர் சபை அமர்வுகள் இன்று 9 ஆம் திகதி சனிக்கிழமை முதல் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

மத்தியஸ்த சபைகள் ஆணைக் குழுவின் அனுமதியின் பிரகாரம் கொவிட்-19 தொடர்பான சுகாதார நடைமுறைகளினைப் பின்பற்றி நடைபெறவுள்ளது.

எனவே மத்தியஸ்தர் சபை அமர்வுகளுக்கு வருகை தருவோர் சுகாதார நடைமுறைகளினைப் பின்பற்றுமாறும் தவிசாளர் தெரிவித்துள்ளார். (5)

# போதைப் பொருட்களுடன் இருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் போதைப்பொருட்களுடன் சாவகச்சேரி நகர் மற்றும் உசன் பகுதிகளில் வைத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து மேற்கொண்ட இக் கைது நடவடிக்கைகளின் போது சாவகச்சேரி நகர் பகுதியில் 270 மில்லிக் கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவரும், உசன் பகுதியில் 71 கிராம் கஞ்சாவுடன் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் நேற்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு தலா பத்தாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. (5-4-30)




**யாழ்.வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் வன்னி விழிப்புலனற்றோர் அமைப்பு அங்கத்தவர்களின் பிள்ளைகளான 30 மாணவர்களுக்கு 64 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.**

# நெருக்கடியான காலங்களில் பெரும் சமயப்பணி ஆற்றியவர் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

## நல்லை ஆதீனம் புகழாரம்

(குப்பிழான்)

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தலைவராகவிருந்த சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வாழ்ந்த காலம் போராட்ட காலம். இக் காலத்தில் ஷெல்கள், குண்டுகள் பொழிந்த போதும் தனியாக நின்று பல பணிகளைச் செய்தார் என நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் புகழாரம் சூட்டியுள்ளார்.




உலகம் போற்றும் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 96 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அம்மா எவ்வளவு புனிதமாக சமயப் பணிகளைச் செய்தார் என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். யாழில் பல ஆலயங்கள் கட்டப்பட்டன, தனிமைப்படுத்தப்பட்டன, பூட்டப்பட்டன. ஆனால் துர்க்கையம்பாள் ஆலயம் அன்றும் இன்றும் என்றும் செயற்பட்டுக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. அந்த வகையில் ஆலய நிர்வாகத்தினருக்கும் அறங்காவலர்களுக்கும் தொண்டுள்ளம் படைத்த நல்லுள்ளங்களுக் கும் என் வாழ்த்துக்கள். இன்று (நேற்று முன்தினம்) சிவத்தமிழ் விருது பெற்றவர்கள் அனைவரும் துர்க்கையம்பாளின் தொண்டுப் பணிகளுக்காகத் தங்களை அர்ப்பணம் செய்துள்ளனர்.

இம்முறை வழங்கப்படும் சிவத்தமிழ் விருது இந்த மண்ணுக்கு கிடைக்கின்ற கௌரவம், ஆலயப் பணிகளுக்கு கிடைக்கின்ற கௌரவம்.ஆறு திருமுருகனின் வழிகாட்டலில் அம்மாவின் பாதையில் துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள், பெரியோர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து துர்க்கை அம்பாளின் பணிகளைச் செய்து வருவது எல்லோருக்கும் மகிழ்ச்சியான செய்தி எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(5-4-18)

# ‘ஐறோட்’ திட்டம் தொடர்பாக மாநகர முதல்வருடன் கலந்துரையாடல்

(நல்லூர்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்படும்.(ஐ றோட்) I Road திட்டம் தொடர்பாக யாழ்.மாநகர முதல்வருடனான கலந்துரையாடல் முதல்வர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த ஐ றோட் பொறியிலாளர்கள் இத்திட்டத்தில் 17 வீதிகள் தெரிவு செய்யப்பட்டதாகவும் அதில் பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கை - அரசடி வீதி இணைப்பு வீதியில் ரயில்வே தடத்திற்கு அருகாமையில் வருகின்ற இப் பகுதிகளுக்கு ரயில்வே திணைக்களத்தின் அனுமதி கிடைக்காத காரணத்தினால் நிறுத்தப்பட்டு இருப்பதாகவும் அதற்கான நிதி புங்கன்குளம் வீதிக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன் பிறவுண் வீதி, வைமன் வீதி, றக்கா வீதி என்பன வடிகால் அமைப்புடன் செய்யப்படவுள்ளதாகவும் ஏனையவற்றில் இயற்கை நீரோட்டம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நீர் இணைப்பு வேலைகள் நடைபெறுகின்ற ஒழுங்கில் குறித்த 17 வீதிகளின் புனரமைப்பு நடைமுறைப்படுத்தப்படும். வேலைகளை வெகு விரை வாக ஒழுங்குபடுத்தி விரைவில் முடிக்குமாறும் 17 வீதிகளில் மக்களினால் அதிகளவில் பயன்படுத்தப்படும் வீதிகளை முன்னுரிமைப்படுத்தி அவ் ஒழுங்கில் வீதிகளைப் புனரமைக்குமாறும் அவ் வீதிகளின்முன்னுரிமைப்பட்டியலை தாம் தயாரித்து வழங்குவதாகவும் முதல்வர் தெரிவித்தார்.

யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி மணிவண்ணன் உடனான இச்சந்திப்பில் ஐறோட் திட்டத்தின் வட மாகாண பொறியியலாளர், யாழ்:பகுதி பொறியியலாளர், மாநகர ஆணையாளர் ஜெய சீலன், மாநகர பொறியியலாளர் சுரேஸ்குமார் மற்றும் மாநகரசபை உறுப்பினர் வ.பார்த்திபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-33)

# திருவாசகம் முற்றோதல்

(குப்பிழான்)

ஏழாலை தெற்கு இராமத்தம் பீமா ஞானவைரவர் ஆலய வருடாந்த திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 07.30 மணி முதல் இடம்பெறும். (5-4-18)



புது வருட தினத்தில் சாவகச்சேரி ஆதி வாரி வனேசர் ஆலயத்தில் சாவகச்சேரி நீதிமன்ற நலன்புரிச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் மரநடுகைத் திட்டமும், மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. இந் நிகழ்வில் சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (படம்:- சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவருக்கு தொற்று உறுதி

(கொழும்பு)

முகக்கவசம் அணியாதவர்களை கைது செய்து, ரபிட் அன்டிஜன் அல்லது பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்து கின்ற திட்டத்தின் மூலம் கைது செய்யப் பட்டவர்களில் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு ள்ளது.

குறித்த பரிசோதனையிலேயே மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அஜித் ரோஹண சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)


## சேவை நலன் பாராட்டு



Congratulations

யா/யூனியன் கல்லூரி
தெல்லிப்பழை

எமது கல்லூரியில் விஞ்ஞான பாட ஆசிரியராக, பகுதித்தலைவராக அரும்பணியாற்றி இன்று (09.01.2021) ஓய்வுபெறும்

திரு.
தாமோதரம்பிள்ளை
இராசரத்தினம்
SLTS - I

அவர்களின் சேவையை மனதாரப் போற்றி வாழ்த்துகின்றோம்

**சேவை விபரம்**

யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை
24.04.1989 - 05.02.1991

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி
05.02.1991 - 31.12.1992

யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை
01.01.1993 - 06.10.1997

கோட்டக்கல்வி அலுவலகம் உடுவில்
06.10.1997 - 31.12.1998

வலிகாமம் வலயக்கல்வி அலுவலகம்
01.01.1999 - 31.12.2001

யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி
01.01.2002 - 03.10.2010

கோட்டக்கல்வி அலுவலகம் உடுவில்
03.10.2010 - 14.05.2013

யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை
14.05.2013 - 09.01.2021



*எமது கல்லூரியில் நல்லாசிரியராகவும் பகுதித்தலைவராகவும் எட்டு வருடங்கள் பணியாற்றி இன்றைய தினம் ஓய்வுபெறும் திரு.தா.இராசரத்தினம் ஆசிரியர் அவர்களை எமது கழகத்தின் சார்பில் வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம். இணைப்பாடவிதான செயற்பாட்டாளராக, உணவுக்குழ பொறுப்பாளராக, மாணவர்வழிப்படுத்துநராக, சமூக உறவுப்பாலமாக பல்வேறு பரிமாணங்களில் பொறுப்புக்களை ஏற்று திறன்படச் செயற்பட்ட இவரின் பணியை பாராட்டி ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.*

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யாழ்/யூனியன் கல்லூரி.

(5222)



## நல்லூர் பிரதேச சபை
## பொது அமைப்புகளுக்கான அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் கழகங்கள் உள்ளிட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஆர்வமுடையோர் இணைந்து பொது தனியார் பங்களிப்புடன் சுற்றாடலை சுத்த மாக வைத்திருத்தல் மற்றும் மேம்படுத்துதல் பௌதீக அபிவிருத்தி தொடர்பான ஆலோசனை வழங்கி சபையுடன் இணைந்து செயற்பட அழைப்பு விடுக்கப்படு கின்றது. **"எமது பிரதேசத்தை நாமே வடிவமைப்போம்"** என்ற அடிப்படையில் ஆர்வமுடையோர் நேரடியாகவோ அல்லது தொலைபேசியூடாகவோ தவிசாளரைத் தொடர்பு கொண்டு ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இத்தால் அழைப்பு விடுக்கின்றேன்.

**தொடர்பு இலக்கம்**
**021 300 2508**
**021 222 2700**

(C-115)

**ப.மயூரன்,**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை**



## வீட்டிற்கும் வேலைக்கும் வாசற்படியில்
## Door to Door Delivery



ஒடியல் கூழ் முதல்
பிரியாணி,பிறைட்றைஸ்
யாழ்.மதிய இரவு
நேர உணவுகள்

கொத்துரொட்டி,புட்டு
இடியப்பம்,அப்பம்,பராட்டா
என பலவகை.

VISA MasterCard AMERICAN EXPRESS UnionPay

**077 734 0026**
**021 222 6868**




**Virounthu @ Yarl Pardy**
யாழ்பாடி

49-51 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Amman Road, Nallur, Jaffna.

Any Time Including Lock Down / Rooms & Restaurant
தங்கும் அறைகள், உணவகம் /



## மணமகள் தேவை

மிகவும் உயர் பதவியிலுள்ள கௌரவ குடும்பத்தைச் சேர்நத 9 இல் செவ்வாய் சிம்மராசி மண மகனுக்கு பொருத்தமான படித்த அழகிய மணமகள் தேவை.

**தொடர்பு- 077 397 1841**
**077 891 3745**

(5191)



## பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு ஆர்வமா ?

32 வருட அனுபவமுடையவரின் இலவச ஆலோசனை பெற

**N. ஈஸ்வரராஜா**
**070 100 3223**

( இரவு 7.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரை )

(5174)



## தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மட்டு)

### கூறுவிலை கோரல்

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங் களின் கொத்தணியில் மதுசார உற்பத்தியை மேற்கொள்வதற்காக புதிய நவீன முறையிலான தொடர் வடிசாலையை கட்டடம் இதற்குரிய ஏனைய வசதிகளுடன் நிறுவுவதற்கான கூறுவிலையினையும், தற்போது பயன்படுத்தப்படுத்தும் பானை முறையிலான வடிகலன் பொறித் தொகுதியை திருத்தம் செய்வதற்கான கூறுவிலையினையும் தொழிலை மேற்கொள்ளும் அனுபவம் வாய்ந்த பொறியியலாளர் களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். அலுவலக வேலை நாட்களில் எம்மோடு தொடர்பு கொண்டு கூறுவிலையை வழங்க முடியும். (021 205 0854). இக் கூறுவிலை களை எதிர்வரும் 20.01.2021 இற்கு முன்னர் **தலைவர் தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் கொத்தணி பருத்தித்துறை வீதி, வரணி** என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

க.துரைசிங்கம்
தலைவர்.

(C-1113)


## பண்டார நாயக்கவின் ஜனனதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது

(கொழும்பு)

மறைந்த முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயக்கவின் 122 ஆவது ஜனன தினம் நேற்று வெள்ளிக் கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு காலிமுகத்திட லில் அமைந்துள்ள பண்டார நாயக்க உரு வச்சிலைக்கு முன்பாக அவரை நினைவு கூரும் நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் முன்னாள் ஜனாதி பதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க மற்றும் சுனேத்ரா குமாரதுங்க ஆகியோர் முதலில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதி பதியுமான மைத்திரிபால சிறிசேன மற்றும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பண்டார நாயக்க உருவச்சிலைக்கு மலர்மாலை அணி வித்து அஞ்சலி செலுத்தினர். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமநல நிலைய உழவு இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு முன்வருவதில்லை

(அக்கராயன்)

**கமநல சேவை நிலையங்களில் உள்ள உழவு இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு விவசாயிகள் முன்வருதில்லை என முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.புனிதகுமார் தெரிவித்துள்ளார்.**



முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கமநலசேவை நிலையங்களில் உள்ள உழவு இயந்திரங்களின் பயன்பாடு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, மீள்குடியேற்றத் தொடக்கத்தில் உழவு இயந்திரங்களை விவசாயிகள் கூடுதலாக கமநலசேவை நிலையங்கள் ஊடாக பயன்படுத்தினர். தற்போது கூடுதலான விவசாயிகளிடம் உழவு இயந்திரங்கள் உள்ளன. காடுகளை அழித்து மேற்கொள்ளப் படுகின்ற பயிர்ச்செய்கைகளுக்கே கமநல சேவை நிலையங்களின் உழவு இயந்திரங்களை விவசாயிகள் பயன்படுத்த முன்வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட கமநலசேவை நிலையங்களில் 50 இற்கு மேற்பட்ட உழவு இயந்திரங்கள் உள்ளன. எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்குவதற்கான முடிவும் உள்ளது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை 2009 ஆம் ஆண்டின் பின்னர் இந்திய அரசினால் வழங்கப்பட்ட உழவு இயந்திரங்களே தற்போது பயன்பாடின்றி மாவட்ட கமநல சேவை நிலையங்களில் காணப்படுகின்றன. (4-5-350)

# வவுனியா நகர்ப்பகுதியில் 55 கொரோனா தொற்றாளர்கள்

(நெளுக்குளம்)

வவுனியா நகர்ப்பகுதியில் 55 பேருக்கு கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வவுனியா சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பட்டாணிச்சூரில் 7 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் வவுனியா நகர்ப் பகுதியில் கடந்த புதன்கிழமை பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது நகர்ப்பகுதியில் உள்ள வர்த்தகர்கள், அங்கு பணியாற்றுவோர் மற்றும் பட்டாணிச்சூர் பகுதியில் இருந்து சட்டவிரோதமாக வெளியேறி வர்த்தக நிலையத்தினை திறந்தவர்கள் என 204 பேருக்கு இவ்வாறு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் நேற்று அவர்களுக்கான முடிவுகள் வெளிவந்துள்ள நிலையில் 55 பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (5-4-299)



**கிளிநொச்சி உருத்திரபுரம் உதவும் கரங்கள் கனடா அமைப்பினால் புதுமுறிப்பு விக்கினேஸ்வரா பாடசாலையில் 5 ஆம் தர புலமைப்பரிசில் தோற்றிய மற்றும் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. (படம்:-ரகுபதி)**

# நடந்து செல்லும் மாணவர்களுக்கு விடிவு கிடைக்குமா?

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் 20,000 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பாடசாலை நாட்களில் நடந்து செல்லும் மாணவர்களாகவே காணப்படுகின்றனர்.

2009 ஆம் ஆண்டின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றம் நடைபெற்று பாடசாலைகள் இயங்கத் தொடங்கிய நாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலகம், வலயக் கல்விப் பணிமனைக் கூட்டங்களில் நடந்து செல்கின்ற மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்த வேண்டும் என பாடசாலை முதல்வர்களினாலும் பாடசாலைகளில் நடைபெறுகின்ற கூட்டங்களில் பெற்றோர்களினாலும் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 112 பாடசாலைகளில் தற்போது 104 பாடசாலைகள் இயங்குகின்றன.

33,000 இற்கு மேற்பட்ட மாணவர்கள் உள்ளனர். இம் மாணவர்களில் 20,000 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைக்கு நடந்து செல்லும் நிலைமை காணப்படுகிறது.

தினமும் சுமார் 5 கிலோ மீற்றர் தூரம் நடந்து பாடசாலை செல்லும் மாணவர்களும் உள்ளனர். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இவ்விடயம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே உரியவர்கள் மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டு அவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து கற்றலுக்கு ஊக்கமளிக்குமாறு பெற்றோர் மற்றும் பாடசாலை சமூகத்தினர் வேண்டுகோள் விடுக்கின்றனர். (5-4-350)

# சிரமதான பணிக்கு அழைப்பு

(நெளுக்குளம்)

பாடசாலைகளை எதிர்வரும் 11 ஆம் திகதி திட்கட்கிழமை ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை முன்னெடுத்துள்ளது.

இந்நிலையில் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை அதிபர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

பல மாதங்களாக பாடசாலைகள் செயற்பாடுகளின்றி காணப்பட்டமையினால் மாணவர்களின் நன்மை கருதி பாடசாலையில் சிரமதானப்பணிகள் மேற்கொள்வதற்கு பெற்றோர்களுக்கு வகுப்பாசிரியரினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் பெற்றோர்களை இன்று சனிக்கிழமை காலை 8 மணியளவில் சிரமதானத்திற்குரிய உபகரணங்களுடன் பாடசாலைக்கு சமுகமளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (5-4-299)

# டெங்கு பரவும் சூழல் 10 பேருக்கு எதிராக வழக்கு

(குருமன்காடு)

டெங்கு பரவும் நிலையில் வீட்டுச் சூழலை வைத்திருந்த 10 பேருக்கு எதிராக சுகாதார பரிசோதகர்களினால் நேற்று முன்தினம் வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


வவுனியாவின் பண்டாரிக்குளம், வைரவபுளியங்குளம், குருமன்காடு உள்ளிட்ட நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் தொடர்ந்தும் இவ் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

பொது சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு குழுவினரும் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

இதன்போது இடம்பெற்ற களத்தரிசிப்பில் டெங்கு பரவும் அபாயத்துடன் காணப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டதுடன் பலருக்கு எச்சரிக்கை கடிதங்களும் வழங்கப்பட்டன.

அந்தவகையில் 10 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் 5 பேருக்கு 25 ஆயிரம் ரூபா வீதம் நீதிமன்றால் அபராதம் விதிக்கப்பட்டதுடன், 5 பேருக்கு எதிரான வழக்குத் தவணையிடப்பட்டுள்ளது. (5-4-350)

# வீதிப் புனரமைப்பு ஆரம்பம்



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் முதன்மை வீதிகள் புனரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த பத்தாண்டுகளாக முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கிற்கான முதன்மை வீதிகள் புனரமைக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் இப்பகுதி பொது அமைப்புகளினால் முன்வைக்கப்பட்டு வந்தன. இந்நிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்புடன் தற்போது மாந்தை கிழக்குப் பகுதியில் வீதிகள் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (5-4-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

09.01.2021
மார்கழி 25, சனிக்கிழமை,
ஏகாதசி மாலை 6.14 மணிவரை
விசாகம் முற்பகல் 11.41 மணிவரை
சுபநேரம் 3.32-5.02 மணிவரை
இராகுகாலம் 9.32 -11.02 மணிவரை
சந்திராஷ்டமம் - அச்சுவினி, பரணி
ஏகாதசி விரதம்

வளவன்

**மேஷம்**
கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு.

**ரிஷபம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்**
செய்தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், எதிர்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கடகம்**
வியாபார விருத்தியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், தாழ்ந்த சுபாவமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்**
நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**கன்னி**
முயற்சிகளில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு, உறவினர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பர், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்**
எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, போசன சுகமுண்டு, பணப்புழக்கம் கூடும் நாள்.

**விருச்சிகம்**
கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும்.

**தனுசு**
மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலையுண்டு.

**மகரம்**
வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், முயற்சிகள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு, உறவினர்களின் வருகையுண்டு.

**கும்பம்**
செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**மீனம்**
ஆன்றோர்களின் சந்திப்புண்டு, தடைப்பாட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

காலம் கடிது, செல்லும் கலையோ நிலைத்து நிற்கும்.

# வெளிநாட்டில் சிக்கியுள்ளவர்களை மீட்கக் கோரி ஆர்ப்பாட்டம்





(கொழும்பு)
ஐக்கிய மக்கள் சக்தி நேற்று முன்தினம் மாலை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் முன் வெளிநாட்டில் உள்ள இலங்கை சமூகத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர்களின் பாதுகாப்பு மற்றும் திருப்பி அனுப்பப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் கோரி ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது.

இந்த போராட்டத்திற்கு எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, மக்கள் பிரதிநிதிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நாட்டிற்கு அந்நிய செலாவணியைக் கொண்டுவரும் இலங்கையர்கள் தேர்தலுக்கு முன்னர் "நாட்டு வீராங்கனைகள்" என்று அழைக்கப்பட்டனர். ஆனால் இன்று அரசாங்கம் வெளிநாட்டில் அவர்கள் எதிர்நோக்கும் துன்பத்தை கண்டும் காணாமலும் இருந்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார். (நி-4)

# கிழக்கில் அதிகரிக்கும் தொற்றாளர்கள் 6 பிரதேசங்கள் சிவப்பு வலயங்களாக பிரகடனம்

(மட்டக்களப்பு)
கிழக்கில் 6 பிரதேசங்கள் கொரோனா சிவப்பு வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அ.லதாகரன் தெரிவித்துள் ளார்.

மட்டக்களப்பு- திருகோணமலைநகர், காத்தான்குடி, அட்டாளைச்சேனை, கல்முனை தெற்கு, சாய்ந்தமருது, உகண ஆகிய 6 சுகாதாரப் பிரிவுகள் சிவப்பு வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அ.லதாகரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, "பேலியகொட மீன் சந்தைக்கு பின்னர் கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் மூலம் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 58 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் கிழக்கில் 6 பிரதேசங்கள் கொரோனா சிவப்பு வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. விசேடமாக இந்த பகுதியிலுள்ள மக்கள், சுகாதார துறைக்கும் மற்றும் கொரோனா சம்பந்தமாக செயற்படுகின்ற அனைத்துத் தரப்பினருக்கும்



ஒத்துழைப்பை பூரணமாக வழங்கும் பட்சத்தில் மட்டும்தான் இந்த தனிமைப்படுத்தலை மிக விரைவில் நீக்க முடியும்.

கிழக்கில் தொற்றின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. எனவே தொடர்ச்சியாக மக்கள் சுகாதார அமைச்சின் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்" என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-4)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**35வது பொதுப்பட்டமளிப்பு வைபவம்-2021**
**பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கம்**

பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு கல்வியாண்டு 2016/2017 மற்றும் 2017/2018 இல், பட்டம் பெற்று முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பு மேற் பிரிவில் சித்தியெய்தி, எதிர்வரும் 35வது பொதுப் பட்டமளிப்பு வைபவத்தில் இளமாணிப் பட்டம் அளிக்கப்படவிருக்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் ஒரு முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. உதவிப் பதிவாளர், கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

2. பிரதிப் பதிவாளர், பரீட்சைகள் மற்றும் மாணவர் சேவைகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம், வவுனியா.

3. www.jfn.ac.lk இணையத்தளம்

விருதுகள்:-பல்கலைக்கழக மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாக செயற்பட்டமைக்காக ஒரு பதக்கம். பீட மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டமைக்காக ஒவ்வொரு பீடத்திற்கு ஒவ்வொரு பதக்கம்.

முடிவுத் திகதி:-27.01.2021 (புதன்கிழமை)
முக்கிய குறிப்பு:- சரியான, பொருத்தமான தகவல்களை உள்ளடக்காதவையும், தெளிவற்றவையும், பூரணப்படுத்தப்படாதவையும் மற்றும் முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுபவையுமான விண்ணப்பங்கள் யாவும் கருத்திற் கொள்ளப்படமாட்டா.

(ө-1116)

**பதிவாளர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ரம்பை கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்டது

(பக்தாத்)

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பித்து ஈராக் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.**



கடந்த ஆண்டு ஈரானின் புரட்சிப் படைத்தளபதி காசிம் சொலெய்மானியை ஆள் இல்லா விமானம் மூலம் அமெரிக்க இராணுவம் ரொக்கெட் தாக்குதல் நடத்தி கொலை செய்தமை தொடர்பான வழக்கிலேயே நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தளபதி காசிம் சொலெய்மானி, அவரின் மருமகன் முகந்திஸ் உள்ளிட்ட ஒன்பது பேர் கடந்த 2020ஆம் ஆண்டு ஜனவரி மூன்றாம் திகதி ஈராக்கின் பாக்தாத் விமான நிலையத்தில் அமெரிக்கத் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், அமெரிக்கர்களைக் கொல்வதற்கு சொலெய்மானி திட்டமிட்டதால் அவரைக் கொன்றோம் என ஒற்றை வார்த்தையில் அமெரிக்க அரசு விளக்கம் அளித்திருந்தது.

இதையடுத்து, அமெரிக்க அரசின் கட்டவிழ்த்துவிட்ட தீவிரவாதத்தால்தான் சொலெய்மானி கொல்லப்பட்டார் எனவும் அதற்குப் பழி தீர்ப்போம் என்றும் ஈரான் தெரிவித்திருந்தது. இந்நிலையில், ஈராக்கில் உள்ள பாக்தாத் விசாரணை நீதிமன்றம், இராணுவத் தளபதி காசிம் சோலெய்மானி, அபு மஹ்தி அல் முகந்திஸ் கொலை செய்யப்பட்ட வழக்கை விசாரித்து வருகிறது.

கடந்த வாரம் முகந்திஸ் குடும்பத்தினரிடம் விசாரணை நடத்திய நீதிமன்றம், அவர்களிடம் வாக்குமூலத்தைப் பதிவு செய்தது.

இந்நிலையில், காசிம் சொலெய்மானி, முகந்திஸ் இருவரையும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான இராணுவம் திட்டமிட்டுக் கொலை செய்துள்ளது என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து, அமெரிக்க ஜனாதிபதி பதவியிலிருந்து வெளியேறவுள்ள ட்ரம்ப்பைக் கைதுசெய்ய பக்தாத் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதுடன் ட்ரம்ப் மீதான கொலைக்குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என அந்நாட்டு செய்திகள் தெரிவித்துள்ளன. (நி-4)

# விஞ்ஞானிகள் குழுவை சீனா அனுமதிக்க வேண்டும்

## அவுஸ்திரேலியா வலியுறுத்தல்

(கன்பரா)

உலக சுகாதார அமைப்பு அனுப்பும் விஞ்ஞானிகள் குழுவை சீனா அனுமதிக்க வேண்டும் என்று அவுஸ்திரேலியா வலியுறுத்தியுள்ளது.

கொரோனா வைரஸ் சீனாவின் ஆய்வகத்திலிருந்துதான் பரவியுள்ளது என்று அமெரிக்கா தொடர்ந்து கூறி வருகிறது. இந்த நிலையில் உலக சுகாதார அமைப்பின் 10 பேர் அடங்கிய விஞ்ஞானிகள் குழு இம்மாதம் சீனாவுக்குச் செல்ல இருப்பதாகத் தகவல் வெளியானது.


ஆனால், விஞ்ஞானிகள் குழு செல்வதற்கு சீனா அனுமதிக்கவில்லை என்றும், சீனாவின் முடிவு ஏமாற்றம் அளிப்பதாகவும் உலக சுகாதார அமைப்பு நேற்று தெரிவித்தது.

இந்நிலையில் விஞ்ஞானிகள் குழுவை அனுமதிக்குமாறு அவுஸ்திரேலியா வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து ஆஸ்திரேலிய வெளியுறவுத் துறை அமைச்சர் மாரிசே ப்யானே கூறும்போது, " உலக சுகாதார அமைப்பு அனுப்பும் விஞ்ஞானிகள் குழுவை சீனா தாமதிக்காமல் அனுமதிக்க வேண்டும். விரைவில் சீனா இது தொடர்பான நடவடிக்கையில் இறங்கும் என்று நம்புவோம்" என்றார்.

சில நாட்களுக்கு முன்னர், வுஹானின் ஆய்வகத்திலிருந்து கொரோனா பரவவில்லை. உலகின் பல இடங்களில் கொரோனா வெடிப்பு நிகழ்ந்துள்ளது என்று சீனா விளக்கம் அளித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# சீனா மீது பொருளாதாரத் தடை விதிக்க தயாராகும் அமெரிக்கா



(வோஷிங்டன்)

ஹொங்கொங் ஜனநாயக ஆர்வலர்கள் கைது விவகாரத்தில் ஆத்திரமடைந்துள்ள அமெரிக்கா, சீனா மீது கடுமையான பொருளாதார தடைகளை விதிக்க தயாராகி வருகின்றது.

சீனாவின் நேரடி கட்டுப்பாட்டில் இருக்கும் ஹொங்கொங்கில், ஜனநாயகத்தை பறிக்கும் செயற்பாடுகளுக்கு அமெரிக்கா தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், நேற்று முன் தினம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் அமுல்படுத்தப்பட்ட சீனாவின் சர்ச்சைக்குரிய தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ், அமெரிக்க சட்டத்தரணி உட்பட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள் உட்பட 50க்கும் மேற்பட்ட ஜனநாயக ஆர்வலர்களை ஹொங்கொங் பொலிஸார் கைது செய்தனர்.

இந்த கைது நடவடிக்கைக்கு உலக நாடுகள் பலவும் கவலை தெரிவித்துள்ளநிலையில், அமெரிக்கா, சீனா மீது கடுமையான பொருளாதார தடைகளை விதிக்கவுள்ளதாக எச்சரித்துள்ளது.

வர்த்தக போர், தென் சீன கடல் விவகாரம், உய்கூர் இன முஸ்லிம்கள் மீது அடக்கு முறை, கொரோனா வைரஸ் விவகாரம், ஹொங்கொங் பாதுகாப்பு சட்டம் உள்ளிட்ட விடயங்களில் சீனாவுக்கும் அமெரிக்காவும் மோதல்நிலை நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# உலக பணக்காரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்தார் எலான் மஸ்க்



(நியூயோர்க்)

உலக பணக்காரர்கள் பட்டியலில் 2வது இடத்தில் இருந்த எலான் மஸ்க், அமேசான் நிறுவனர் ஜெப் பெசோசை முந்தி முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

மின்னல் வேக ஹைப்பர் லூப் பயணம், செவ்வாயில் மனிதர்களை குடியேற்றும் முயற்சி, அதிவேக எலெக்ட்ரிக் சூப்பர் கார்களை தயாரிப்பது என பல்வேறு கனவுத் திட்டங்களின் கதாநாயகனாக திகழ்கிறார் எலான் மஸ்க்.

கடந்த சில வாரங்களாக உலக பணக்காரர்கள் வரிசையில் இவர் இரண்டாவது இடத்தில் இருந்தார்.

இந்நிலையில், எலான் மஸ்கின் சொத்து மதிப்பு நியூயோர்க்கில் நேற்று முன்தினம் காலை 10.15 மணிக்கு 188.5 பில்லியன் டொலராக இருந்தது. இது அமேசான் நிறுவனர் ஜெப் பெசோசைவை விட 1.5 பில்லியன் டொலர் அதிகமாகும்.

டெஸ்லாவின் பங்கு அதிவேக வளர்ச்சியில் செல்வதால் எலான் மஸ்க்கின் சொத்து மதிப்பும் உயர்ந்து கொண்டு செல்கிறது. கடந்த ஆண்டு மட்டும் டெஸ்லாவின் பங்குகள் 743 சதவீதம் உயர்ந்துள்ளது.

ஜெப் பெசோஸ் கடந்த 2017 ஒக்டோபர் மாதம் முதல் உலக பணக்காரர் பட்டியலில் தொடர்ந்து முதலிடம் வகித்துவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. - (நி-4)

# தொற்று பரவல் தீவிரம்; ஜப்பானில் அவசரநிலை பிரகடனம்



(டோக்கியோ)

ஜப்பானில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் மீண்டும் தீவிரமடைந்துள்ள நிலையில், அங்கு முக்கிய மாகாணங்களில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பாதிப்பு தீவிரமாக உள்ள டோக்கியோ, சிபா, சைதாமா மற்றும் கனகவா ஆகிய மாகாணங்களில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அவசர நிலை நேற்று வெள்ளிக்கிழமை தொடங்கி அடுத்த மாதம் 7ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் பாடசாலை, கல்லூரி உள்ளிட்ட அனைத்து கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டிருக்கும். அத்தியாவசிய கடைகளைத் தவிர மற்ற அனைத்து கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களும் அடைக்கப்படும்.

மேலும் மக்கள் பொது இடங்களில் கூடுவதை தவிர்க்கும்படியும் கூடுமானவரை வீடுகளுக்குள்ளேயே இருக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—226

# உப்பிட்டவரை உள்ளளவும் நினை!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

தை மகளை இனிய புன்முறுவலுடன் அழைத்துவந்து இவ்வருட ஆரம்ப மகிழ்ச்சியைக் கொண்டாட அனைவரும் முயன்று கொண்டிருக்கின்றோம். இயற்கை புத்தாண்டு மகிழ்ச்சியை விரும்பியழைத்து தந்திருக்கின்றது மட்டுமல்லாது மகிழ்ச்சியாக இருக்க முயற்சி செய்யச் சொல்லியிருக்கின்றது.

விவசாயியின் உள்மனதில் ஏக்கமே முழுமையாக நிரம்பியிருக்கின்றது. காலம் தப்பி காரணமின்றி கொட்டித் தீர்த்த மழையில் நெல் வயல் அழிந்துபோன காட்சிகளையே காண முடிகின்றது.

உணவுக்குப் பஞ்சம் வருவதற்கான சாத்திக்கூறுகள் இருப்பதனால் அவசியம் உற்பத்தியை சமன் செய்ய வேண்டிய தேவை எழுந்திருக்கின்றது. இதன் மூலம் உணவுப் பழக்க வழக்கங்களை மாற்ற வேண்டியும் ஏற்பட்டிருக்கின்றது.

அனைத்து இடர்களையும் தாண்டி அனைவரும் மகிழ்வாக வாழ்க்கையில் வெற்றி நடைபோட பிறக்கும் தைத்திருநாள் அனைவருக்கும் கைகொடுக்கும் என நம்புவோமாக.

இன்றைய தலைப்பு சற்று வித்தியாசமாக ஆனால் அர்த்தங்கள் பலவற்றுடன் வந்திருக்கின்றது. கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்டன் அளவளாவிய போது இதற்குள் இத்தனை சமாச்சாரமா? என வியக்கவும் வைத்திருக்கின்றது.

நாம் என்றுமே கவனித்திராத பொருள் ஆனாலும் அன்றாடம் எமது உணவில் சேர்த்துக்கொள்ளும் பொருளுமாகும். சிறியளவேனும் உப்பு இடவில்லையென்றால் அதற்கு மதிப்பில்லை என்பார்கள். உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பதன் உள்ளார்ந்த அர்த்தமும் அதுதானே. இந்த உப்பு அதிலும் கறியுப்பு பல குணாங்களைக் கொண்டிருக்கின்றது.

எதுவும் அளவானதாக இருந்தால் சிறப்பானதாகவே இருக்கும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பது போல அளவானதாக உட்கொள்ளும் அனைத்துமே உடலுக்கும் உளத்திற்கும் நன்றாகவே அமையும். இதுவே தாவரங்களிலும் காணலாம். தாவரங்களுக்கும் உப்பும் அதிலுள்ள சோடியம், குளோரின் ஆகிய தாதுப்புக்களும் அவசியமானதாக இருக்கின்றன.

ஆனால் தேவையான அளவினை மீறினால் தாவரம் வரண்டு விடும்.

குறிப்பிட்டுக் கூறினால் தென்னைக்கு அடிப்படையில் சோடியம் குளோரைட்டு கனியுப்பு குறைந்தளவில் இடுவது அவசியமானதாகும். பாரம்பரியமாக தென்னையை நடுகை செய்யும் போது குழியின் அடிப்பகுதியில் சிறிதளவு உப்பினை இட்டு நாற்றுக்களை நடுகை செய்வர். அளவான உப்பின் கசிவினால் வேர்ப்பகுதிகள் உணர்வேற்றப்பட்டு அகத்துறிஞ்சல் அதிகரிக்கும் எனவும் அடிப்பகுதியில் கறையான் போன்ற பூச்சிப்பீடைகளின் தாக்கத்தை உப்பு கட்டுப்படுத்தும் எனவும் அறிய முடிகின்றது. தென்னையின் வளர்ச்சிக்கு உப்பின் மூலமாக இவ்வாறு ஒரு தூண்டல் அவசியம் எனவும் ஆய்வுக்குட்படுத்தி கூறப்பட்டுள்ளது.

கறியுப்பினை சிறுபிடியெடுத்து மரத்தின் அடிப்பகுதியில் அல்லது நாற்றுக்களின் அடிப்பகுதியில் இடுவதன் மூலம் மரத்தின் வேர்த்தொகுதியின் தேவைக்கான உப்பினை வழங்க முடியும். கரையோரங்களில் வளரும் தென்னைப் பயிருக்கு இவ்வாறான உப்புச்சத்து கடல் நீரினூகவே கிடைக்கும். ஆனால் உள்நாட்டுப் பிரதேசங்களில் வளரும் தென்னைப் பயிருக்கு கிடைக்கும் குளோரினின் அளவு குறைவானதாக இருக்கும். இதனாலும் தென்னைகள் காய்ப்பதில்லை மற்றும் இவ்வாறான தென்னைகளின் வளர்ச்சி வீதமும் குறைவடைந்து அவற்றில் காய்களின் உற்பத்தியும் முழுமையாக பாதிக்கப்படும் என்பதனால் வீட்டுத்தோட்டங்களில் தென்னையை நடுகை செய்யும் போது உப்பினை அடியிலிடுதல் அவசியமானதாகும்.

தென்னைப் பயிர்ச்செய்கையில் இன்னும் வீட்டுத்தோட்டத்தில் வளரும் தென்னைகளுக்கு இவ்வாறான உப்புச்சத்து கிடைக்கும் அளவு மிகமிக குறைவானதாகும். ஆதலால் நடுகை செய்யும்போதும் நடுகை செய்த பின்னரும் உப்பு சிறிதளவு தென்னையின் அடிப்பகுதியில் இட்டு தண்ணீர் கட்டுதல் வேண்டும்.

இதற்காக தென்னையைச் சுற்றி சிறிதளவில் குழியெடுத்து விட்டு உப்பினை அடிப்பகுதியில் சுற்றிவர போட்டு நீரூற்றிவிட்டால் அதுவேர்த்தொகுதியில் மாற்றத்தை ஏற்படுத்தி உற்பத்தியை அதிகரிக்க செய்யும்.

தாவரக்கலங்களுக்கு கிடைக்கும் உப்பின் அளவைப் பொறுத்தே அவற்றின் செயற்பாடுகள் மீளமைக்கப்படும். அந்த வகையில் குளோரைட்டு மிகவும் குறைவானதாக காணப்படும் நிலங்களில் தென்னையை பயிரிடும் போது அவற்றின் வளர்ச்சி குன்றி அடிப்பகுதியும் விரிவடையாது நலிவடைந்து விடும்.

பாரம்பரியமாக தென்னையை நடுகை செய்யும் போது குழியின் அடிப்பகுதியில் கறியுப்பினை ஒருபிடியெடுத்து வேர்த்தொகுதியைச் சுற்றி இடுவது வழக்கமானதாகும்.

கறியுப்பின் அளவுப் பிரமாணம் மிகமிக அவசியமானதாகும். அதிகளவில் உப்பினையிட்டால் அது தாவரங்கலங்களை இறக்கச் செய்து நாற்றுக்களையோ இன்னும் வளர்ந்த மரங்களையோ கருகச்செய்து இறக்கச் செய்துவிடும் என்பதனையும் அவசியம் கவனிக்க வேண்டும். இவையனைத்திற்கும் மேலாக உணவுண்ணும் மேசைகளில் இலையான்கள் மொய்க்கும் போது உப்புத்தண்ணீர் தெளிப்பது உண்டு. அதன் மூலம் மேசையின் மேற்பரப்பில் உப்புத் தன்மை காணப்படும் போது இலையான்கள் மொய்ப்பது குறைவடைந்து விடும்.

மேலும் கறியுப்பினைக் கரைத்து அதனை இலைப்பகுதிக்கு விசிறுவதன் மூலம் பாதீனியம் போன்ற களைகளைக் கட்டுப்படுத்தவும் வாய்ப்புக்களுண்டு. கறியுப்பை சிறிதளவை நீரில் நன்றாக கரைத்து அதனை இலைப்பகுதிக்கு விசிறுவதன் மூலம் பாதீனியம் மட்டும் கருகியதை ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.


ஏனைய தாவரங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதிருந்ததும் அவதானிக்கப்பட்டது. ஆதலால் உப்பின் செறிவினை அதிகரிக்கும் போது அது பூச்சி பீடைகளையும் கட்டுப்படுத்தும் திறன் கொண்டதாகவும் பாதீனியம் போற்ற களைகளை கட்டுப்படுத்தவும் பயனாகின்றது.

ஆக மொத்தத்தில் உப்பு எமது உடற் சுகாதாரத்திற்கும் தாவரங்களின் வளர்ச்சிக்கும் அவசியமானதென்பதனால் அதனது அளவை உறுதி செய்து பயன்படுத்துதல் வேண்டும். தொண்டைப்பகுதி கரகரக்கும் போது உப்புத் தண்ணீர் கொப்பளிப்பது என்பதும் குறிப்பிட்ட நுண்ணங்கிகளை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது சாத்தியமாகின்றது.

தென்னைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் உப்பினால் அது தரும் இளநீர் மற்றும் தேங்காய்களை கவனத்திற் கொண்டால் நாம் ஆரம்பத்தில் இட்ட உப்பு பின்னர் பல பயன்கள் தருவதற்கு ஏதுவானதாக அமைந்து விடுகின்றது.

இதனையே உப்பிட்டவரை தென்னைப் பயிர் வாழ்நாள் பூராவும் உள்ளளவும் நினைத்து இளநீராகவும் தேங்காய்களாகவும் தருகின்றது என்றாகின்றது. உப்பிட்டவரை என்னும் போது அதனை மனிதர்களுக்கு அடைமொழியாகவே பார்த்திருக்கின்றோம். ஆனால் அது தாவரங்களுக்கும் மிகவும் பொருத்தப்பாடாக அமைகின்றதனை இங்கு காணலாம்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 309



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் தயாசிறிக்கு கொரோனாத் தொற்று

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஹிக்கடுவ பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் சிகிச்சைகளுக்குட் படுத்தப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. இவர் கடந்த சில நாட்களில் பங்கேற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களை அடையாளம் காணும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

# அரச உளவுச் சேவைக்கான ஆட்சேர்ப்பு எழுத்து மூல பரீட்சைக்கான திகதி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின், அரச உளவுச் சேவையில் கடமையாற்றுவதற்கான பயிற்சி நிலை பொலிஸ் கான்ஸ்டபிள்கள், பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பதவிக்கு நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான எழுத்து மூல பரீட்சை இம்மாதம் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இந்த பரீட்சைகள் 6 பரீட்சை நிலையங்களில் இடம்பெறும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

கொழும்பு 1 ஹமீத் அல் ஹுசைனி மகா வித்தியாலயம், கொட்டாஞ்சேனை விவேகானந்தா மகா வித்தியாலயம், கண்டி புஷ்பதான மகளிர் வித்தியாலயம், அநுராதபுரம் வலிசிங்க ஹரிச்சந்ர மகா வித்தியாலயம், காலி விதியாலோக்க வித்தியாலயம், அம்பாறை டி.எஸ். சேனநாயக்க வித்தியாலயம் ஆகிய பரீட்சை நிலையங்களிலேயே இப்பரீட்சை இடம்பெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு தோற்ற தகுதி பெற்றுள்ள அனைவருக்கும் பரீட்சை அனுமதிப் பத்திரம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட பொலிஸ் தலைமையகம் பரீட்சைக்கு முன்னர் அவ் அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெறாத தகுதி பெற்ற பரீட்சாத்திகள் 011 233 4601 , 011 243 0362 ஆகிய இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி அப்பத்திரத்தை தொலைநகலில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவித்துள்ளது. (நி-4)

# ஹிஜாஸிற்கு தொற்று

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவிற்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா நேற்று முன்தினம் வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படாத நிலையில், அவர் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சி.ஐ.டியினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.



ஹிஜாஸ் ஹில்புல்லா கடந்த வருடம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொண்ட நபருடன் தொலைபேசியில் உரையாடினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இடமாற்றங்கள் இடை நிறுத்தம்

## கிழக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை

(திருமலை)

கிழக்கு மாகாணத்தில் 2021 ஆம் ஆண்டின் அரச இணைந்த சேவைக்கான வருடாந்த இடமாற்றங்கள் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

18.01.2021 இலிருந்து இடம்பெறவிருந்த மாகாண இடமாற்றங்கள் அனைத்தும் ஆளுநரின் பணிப்புரைக்கமைய தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

மாகாணத்தில் நிலவும் கொவிட்-19 நிலைமை காரணமாக அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும் கிழக்கு மாகாணத்தில் பரவலான பகுதிகள் முடக்கப்படுவதால் அதனை முறையாக செய்வதற்கு முடியாத காரணத்தால் அனைத்து இடமாற்றங்களையும் தற்காலிகமாக நிறுத்துமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பணிப்புரை விடுத்துள்ளார். (நி-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2201

### கோகிலா

புதிய வகை கொரோனா தொற்றால் மீண்டும் ஊரடங்கு அமுல்படுத்த ஆலோசனை



எப்படியோ நம்ம டிகிரி முடிக்கும் வரைக்கும் லீவு தான் போல

### அமன்

டேய் உனக்கு பொண்ணு பார்க்கப் போகும் போது பொண்ணுக்கு பூ வாங்கிட்டு வா அப்போதான் நல்லவன் என்று நம்பி பொண்ணு தருவாங்க...



அப்போ என்ன மாப்பிள்ளை பார்க்க வரும் போது கோட்டரும், கோழி புரியாணியும் வாங்கிட்டு வருவாங்களா...!

### தர்சா

பல வருசமா கன்னித்தீவு தேடி நாயா அலையிற சிந்துபாத் எங்கே...!



கன்னிகளையே வச்சு புதுசா ஒரு தீவு ரெடி பண்ணும் நித்தியானந்தா எங்கே...!

### பாமினி

பள்ளிக்கூடம் திறக்கப்போகுது. அத நினைச்சு நான் அழுகுறன்...நீ எதுக்கு டாடி அழுற?



அது இல்ல மை சன் இனிமேல் ஒன்லைன் கிளாசுக்கு உங்க மிஸ் வரமாட்டாங்க அதுதான் அழுகிறன்..!

### துரை

என்ன முதலாளி இன்னமும் கம்முன்னே இருக்கீங்க



ஆத்தி..! இவன் பொங்கல் போனஸ் வாங்காம போக மாட்டன் போல இருக்கே

### ரொசான்

சொல்லாமலே... யார் பார்த்தது...!



நான் பார்த்தன் சேர் லிவிங்டன் மற்றும் கௌசல்யா நடிச்ச படம் சேர்...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முகக்கவசங்களை உரிய முறையில் அப்புறப்படுத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

**முகக்கவசங்களை பாவித்த பின் உரிய முறையில் அகற்றி எமது சுற்றுச் சூழலையும் நாட்டையும் பாதுகாப்போம் என கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

இலங்கையில் முகக் கவசங்கள் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால் ஆகியவற்றிலிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே மக்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து முகக் கவசங்களை உரிய முறையில் அப்புறப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளது.(நி-4)

# பொதுமக்களுக்கான முக்கிய அறிவிப்பு




(கொழும்பு)

2020 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் தேருநர் ஒருவராக பதிவு செய்து கொள்வதற்காக சிபாரிசு செய்துள்ள நபர்களின் பெயர்களை www.elections.gov.lk என்ற இணையத் தளத்தில் பரீட்சித்துக்கொள்ள முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

யாரேனும் ஒருவரின் பெயர் அவ்விடாப்பில் பதிவு செய்வதற்கு சிபாரிசு செய்யப்படவில்லையெனின் குறித்த நபரின் பெயரை தொடர்புடைய பிரதேசத்தை கிராம உத்தியோகத்தர் அல்லது 011 286 0031, 011 286 0032, 011 286 0034 என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாக 2021.01.19 ஆம் திகதிக்கு முன்னர் கடமை நாட்களில், கடமை நேரங்களுக்குள் வினவுவதன்மூலம் தேருநர் இடாப்பில் பெயரை உட்சேர்த்துக் கொள்வதற்கான உரிமைக்கோரலொன்றை மேற்கொள்ள முடியும் என தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (நி-4)

# அதிகாரிகளுக்கும் மக்களுக்குமான இடைவெளியை குறைத்து சேவையாற்ற வேண்டும்- பிரதமர்



(கொழும்பு)

நேர்மையாக மக்களுக்கு சேவையாற்றிய எந்தவொரு அரச அதிகாரியும் தண்டிக்கப்படாத வகையில் அரசியலமைப்பில் பாதுகாப்பை பெற்றுத் தருவோம் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிராமத்துடன் கலந்துரையாடல் தேசிய வேலைத் திட்டத்தின் அரச அதிகாரிகளுக்கு தெளிவூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை அலரிமாளிகையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், "2021 வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக நாம் பாரிய தொகையை உள்நாட்டு தொழிற்றுறையை மேம்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்துள்ளோம்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பொதுமக்களுக்கு எவ்வித நன்மையும் இல்லை என்று எமது விமர்சகர்கள் எம்மீது குற்றம் சுமத்தினர். எனினும் நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் காரணமின்றி நிதியை ஒதுக்கும் திட்டங்களை ஆரம்பித்ததில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேர்தலை எதிர்பார்த்து எவ்விடயமும் இவ் வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. நாம் மக்களுக்கு அவ்வாறான மோசடிகளை செய்யமாட்டோம் என்பதை நாம் ஏற்கனவே கூறியிருக்கின்றோம். இனிவரும் காலங்களிலும் அவ்வாறு செய்யப்போவதில்லை.

இந்த வரவு-செலவுத் திட்டம் கிராம விவசாயிகள், மீனவர்கள், தொழிலதிபர்கள் ஆகியோரை மேம்படுத்துவதற்கே ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே இந்த வரவு-செலவுத்திட்ட முன்மொழிவை செயற்படுத்துவதற்கு எமக்கு சர்வதேச நிபுணர்கள் அவசியமில்லை. அதனால் இவ் வரவு-செலவுத் திட்டத்தை எமது அரச அதிகாரிகளே செயற்படுத்தவுள்ளனர்.

இது கடினமானதொன்று என்பது எமக்குத் தெரியும். எனினும், அந்தக் கடினமான பணியை நீங்களே நிறைவேற்ற வேண்டும். இதுவரை செய்ததும் நீங்களே. அதுவும் எமது நாட்டின் கிராம மக்களுடன் ஒன்றிணைந்து. அம்மக்கள் தொழில் முனைவோருக்கான அறிவைப் பெற்ற, பெரும் பயிற்சி பெற்ற, நிறுவனங்களில் பணியாற்றி தேர்ச்சி பெற்றவர்கள் அல்ல. அவர்களுக்கு நீங்கள் உதவி செய்ய நேரிடும். அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் இடையே காணப்படும் இடைவெளியை குறைத்துக் கொள்ள வேண்டும். அரச அதிகாரிகளான நீங்கள் அரசாங்கத்தின் கருத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே இதற்கு நாம் தீர்வொன்றை வழங்குகின்றோம். நேர்மையுடன் சேவையாற்றிய எந்தவொரு அதிகாரிக்கும் தண்டனை வழங்க முடியாது. எனவே அதற்கு தேவையான அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்பை வழங்குவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புகையும் போகியும்

ஒரு சின்னப் பையன் தெருவிலே ஒரு டயரை போட்டு கொளுத்திக் கொண்டு இருந்தான். ஏன் தம்பி இப்படி செய்கின்றாய் என்று கேட்டேன். உங்களுக்குத் தெரியாதா? சேர்...இன்றைக்கு டயர் கொளுத்த வேண்டிய நாள் என்றான்.

அவன் சொன்னது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. வேண்டாததைப் போக்க வேண்டிய நாள் இது. ஆனால் பல பேர் வேண்டாததை விலைக்கு வாங்குகின்ற நாளாக இதை மாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். ஆமாம்...டயரைக் கொளுத்தினால் என்ன ஆகும் தெரியுமா? அதிலே உள்ள கந்தகம் காற்றிலே உள்ள தண்ணீரோடு சேர்ந்து கந்தக அமிலமாக மாறும். நைதரசன் அதே மாதிரி நைட்ரிக் அமிலமாக மாறும்.

எங்கள் நுரையீரலில் கரி படிந்து போய் மூச்சு சம்பந்தப்பட்ட வியாதியெல்லாம் வரும். டயரை கொளுத்துவதால் அது காற்றையும் கெடுக்கின்றது, நிலத்தையும் கெடுக்கின்றது. அந்தக் காலத்திலேயெல்லாம் அறுவடை முடிந்தவுடனே வேண்டாத குப்பை கூழங்களை வயலிலேயே போட்டு எரிக்கிறது வழக்கம்.

அது மூலமாக சாம்பல் சத்து மண்ணுக்குக் கிடைக்கும். அடுத்த படியாக விளைகிற பயிருக்கு அது உரம். காரணத்தோடு ஆரம்பித்த அந்தப் பழக்கம் இன்றைக்கு என்ன ஆகிவிட்டது?

எதையாவது தெருவிலே போட்டுக் கொளுத்த வேண்டிய நாள் இது என்று நினைக்க ஆரம்பித்து விட்டோம். கொளுத்துவதற்கு எதுவும் கிடைக்கவில்லை...அதனால் பழைய டயரை எடுத்துக் கொளுத்த ஆரம்பித்து விட்டோம்.

சுற்றுச் சூழல் பாதுகாப்பிலே அக்கறை உள்ளவர்கள் எல்லாம் இன்றைக்கு டயர் கொளுத்துவதைப் பார்த்து மிகவும் கவலைப்படுகின்றார்கள்.

டயர் கொளுத்துவது நம்மைச் சுற்றி விசத்தை உண்டாக்குவது மாதிரி. அதனால் அந்த கெட்ட பழக்கத்தை விட்டுவிடுவது நல்லது. சுகாதாரத்துக்கும் நல்லது.

புகையும் பனியும் சேருகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். பார்வை தெளிவாக இருக்காது, கண் எரியும், வாயெல்லாம் அமிலச் சுவை...இது மிகவும் தீவிரமாக ஆகிவிட்டது என்றால் உயிருக்கே ஆபத்து. 1952 டிசெம்பரில் லண்டனில் இதனால் 5000 பேர் வரைக்கும் இறந்து போனதாக ஒரு புள்ளி விபரம்.

கலிபோர்னியாவில் சில தொழில்கூடங்களிலே டயரை எரிபொருளாகப் பயன்படுத்தி இருக்கின்றார்கள். நச்சுப்புகை வெளியேற ஆரம்பித்தது. மக்களே அதை எதிர்த்துப் போராட ஆரம்பித்தார்கள். ஒன்றரை வருடம் போராடினார்கள்.

1994 இலே நீதிமன்றத்திலேயே வழக்குத் தொடர்ந்தார்கள். மக்களுக்கே வெற்றி. எந்தத் தொழிற்சாலையும் டயரைக் கொளுத்தக் கூடாது என்று தடை உத்தரவு போட்டது நீதிமன்றம்.

கொஞ்சக் காலத்துக்கு முன்னர் (இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர்) சென்னையிலேயே என்ன ஆகியது தெரியுமா? நிறையப் புகையும் பனியும் கலந்து நிலமே தெரியாத அளவுக்கு ஆகிவிட்டது.

வந்த விமானம் எல்லாம் இறங்க முடியாமல் திரும்பிப் போக வேண்டியதாகப் போய்விட்டது. காலை 9 மணி வரைக்கும் போக்குவரத்தையே நிறுத்தி வைக்கும் அளவு ஆகிவிட்டது.

இந்தோனேசியாவில் நடந்த கதை தெரியுமா?

1997 செப்டெம்பர் மாதம் காடு எரிந்ததால் வானமண்டலம் புகையாப் போய்விட்டது. வந்து கொண்டிருந்த விமானத்திற்கு வழி தெரியவில்லை. இந்தோனேசிய விமானம் அது. எதிலேயோ மோதி 292 பேர் காலி. இன்றைக்கு நாம் சுற்றுச் சூழலை காப்பாற்றவில்லை என்றால் எதிர்காலத்திலே எங்களை யாராலேயும் காப்பாற்ற முடியாது.

ஒரு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாநாடு நடந்தது. ஒரு நிபுணர் எழுந்து பேசினார்...நண்பர்களே இதேமாதிரி போய்க் கொண்டிருந்தால் எதிர்காலத்திலே மக்கள் எல்லோரும் கழிவு நீரைத்தான் குடிநீராக மாற்றி அருந்த வேண்டியிருக்கும் என்றார். இது கவலைக்குரிய விடயம் தான் என்றார். கேட்டு கொண்டிருந்த ஒருத்தர்.

நான் கவலைப்படுவது இதற்காக இல்லை..என்றார் அவர். வேறு எதற்காக என்றார் இவர். எதிர்காலத்திலே குடிநீராக மாற்றுவதற்காக நமக்குத் தேவையான அளவுக்குக் கழிவுநீர் கிடைக்குமா? என்பது தான் என்னுடைய கவலை என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுகளின் ஆட்புல எல்லைகளும் இலங்கையின் எல்லையோரக் கடல் எல்லை நிர்ணயமும்

07

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



10) தேசிய அதிகார வரம்பிற்கு அப்பால் உள்ள ஆழ்கடல் பரப்பின் இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும் நாடுகளுக்கிடையே தகைமை நெறிப்படி பகிர்ந்தளிக்கவும் அதிகாரம் படைத்த சர்வதேசக் கடற்படுக்கை அதிகார சபை (International Seabed Authority) ஒன்றை ஏற்படுத்துவது குறித்த கோட்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது அம்மாநாட்டின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும்.

**எல்லையோரக் கடலின் அகலம் தொடர்பான பிரச்சினைக்கு இறுதியாக 1982 ஆம் ஆண்டு கடல் சட்டம் பற்றிய ஐ.நா. மாநாட்டின் மூலம் தீர்வு காணப்பட்டது. இம்மாநாட்டுத் தீர்மானத்தின் 3 ஆவது சரத்து ஒவ்வொரு நாட்டிற்கும் தங்களது எல்லையோரக் கடலின் அகலத்தை அதன் கடற்கரை தளக் கோட்டில் (Base line) இருந்து 12 கடல் மைல்கள் வரை நீட்டிக் கொள்வதற்கு உரிமை உண்டு என்று கூறியது. அதன்படி இன்று சர்வதேச அளவில் எல்லையோரக் கடலின் அகலம் 12 மைல்கள் என்பதே நடைமுறையில் உள்ளது.**

### சர்வதேச கடற்படுக்கை அதிகாரசபை (International Seabed Authority)

தேசிய சட்ட அதிகாரத்தின் வரையறைக்கு அப்பால் உள்ள கடற்படுக்கை (Seabed) "மானிட வர்க்கத்தின் பொது மரபுரிமைச் சொத்து" என பிரகடனப்படுத்தப்பட்டபின் தேசிய சட்ட அதிகாரத்துக்கு அப்பால் உள்ள பகுதிகளின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்துவதற்காக சர்வதேச கடற்படுக்கை அதிகார சபையொன்றை (உடன்படிக்கை) நிறுவியது. 1994 இல் நடைமுறைக்கு வந்த இவ்வதிகாரசபை 1996 ஜூனில் தன்னாட்சி கொண்ட சர்வதேச ஒழுங்கமைப்பாக செயற்படத் தொடங்கியது.

### கடல் எல்லை (Maritime boundary)

கடல் எல்லை (Maritime boundary) என்பது கடற் பரப்பின் மீது நிலம் மற்றும் அரசியல் சார்ந்து மனிதனால் உருவாக்கப்பட்ட இரு நாடுகளுக்கிடையேயான பிரிவாகும். கடல் எல்லை ஒரு நாட்டின் கடல்சார் உயிர் மற்றும் கனிம வளங்களின் மீதும் கடற்பரப்பின் மீதான சட்டங்களுக்கும் உரிய அந்நாட்டின் உரிமையை நிலைநாட்டுகிறது. கடல் எல்லை ஆனது ஒரு நாட்டின் ஆளுகைக்குட்பட்ட கடற்பரப்பு (territorial waters), அண்மை கடற்பரப்பு (contiguous zone), பொருளாதார தனியுரிமை வலயம் (Exclusive Economic Zone - EEZ) மற்றும் கண்டத் திட்டு என்று நான்கு பகுதிகளாக வரையறுக்கப்படுகிறது.

**கடல் எல்லை (Maritime boundary) என்பது கடற் பரப்பின் மீது நிலம் மற்றும் அரசியல் சார்ந்து மனிதனால் உருவாக்கப்பட்ட இரு நாடுகளுக்கிடையேயான பிரிவாகும்.**

### ஆளுகைக்குட்பட்ட கடற்பரப்பு (territorial waters)


கடல் சட்டம் குறித்த ஐக்கிய நாடுகள் மாநாடு (1982) இல் வரையறையின் படி, ஆளுகைக்குட்பட்ட கடற்பரப்பு (territorial waters) என்பது ஒரு நாட்டின் கடல் அடித்தள மட்டத்திலிருந்து 12 கடல் மைல் (அதாவது 22.2 கி.மீ, 13.8 மைல்) வரை உள்ள கடற்பரப்பாகும். ஆளுகைக்குட்பட்ட கடற்பரப்பு என்பது ஒரு நாட்டின் இறையாண்மை எல்லை ஆகும். மேலும் ஒரு நாட்டின் இறைமை ஆளுகைக்குட்பட்ட கடற்பரப்பு உள்ளடக்கிய வான்பகுதி மற்றும் கடற்படுகைக்கும் பொருந்தும்.

**கடல் சட்டம் குறித்த ஐக்கிய நாடுகள் மாநாடு (1982) இல் வரையறையின்படி, ஆளுகைக்குட்பட்ட கடற்பரப்பு (territorial waters) என்பது ஒரு நாட்டின் கடல் அடித்தள மட்டத்திலிருந்து (தளக்கோட்டிலிருந்து) 12 கடல் மைல் (அதாவது 22.2 கி.மீ, 13.8 மைல்) வரை உள்ள கடற்பரப்பாகும்.**

### அண்மை கடற்பரப்பு (contiguous zone)

அண்மை கடற்பரப்பு (contiguous zone) என்பது ஆளுகைக்குட்பட்ட கடற்பரப்பின் வெளிப்புறத்திலிருந்து அடுத்த 12 கடல் மைல் (அதாவது ஒரு நாட்டின் கடற்கரை அடித்தள மட்டத்திலிருந்து 24 கடல் மைல்) உள்ள கடல் நீர்ப்பரப்பாகும். அண்மை கடற்பரப்பில் ஒரு நாடு அதன் சுங்க, நிதி வரவு, குடியமர்தல் மற்றும் சுகாதார சட்ட மற்றும் விதிமுறை மீறல்களை தடுக்கவும் கண்காணிக்கும் வரையறை பெற்றுள்ளது.


சமுத்திர நிலவுருவங்களும் நாட்டின் கடல் எல்லைகளும்




### பொருளாதார தனியுரிமை வலயம் (Exclusive Economic Zone - EEZ)

பொருளாதார தனியுரிமை வலயம் (Exclusive Economic Zone - EEZ) ஒரு நாட்டின் கடற்கரை அடித்தள மட்டத்திலிருந்து அதிகபட்சமாக 200 கடல் மைல் துாரம் வரை பரவியுள்ள கடற்பரப்பாகும். இஃது அண்மை கடற்பரப்பையும் உள்ளடக்கியுள்ளது. இப்பகுதியின் மீன் வளம், கனிம வளம், பெற்றோலிய ஆய்வு போன்ற அனைத்து வளங்கள் மீதான உரிமைகளையும் மற்றும் இவ்வளங்கள் சார்ந்த கழிவு மேலாண்மையையும் அந்த நாடே கட்டுப்படுத்துகிறது. எனினும் இப்பகுதியின் வழியாக வேறு நாட்டின் கப்பல்கள் பயணிக்கவோ அல்லது ஐக்கிய நாடுகளின் விதிகளுக்குட்பட்டு இக்கடற்பரப்பில் வேறு நாடுகள் கழிவுகளை கொட்டாவோ தடை செய்யும் அதிகாரம் இல்லை.

கடல் மற்றும் வான் ஆட்புல எல்லைகள்
Legal Boundaries of the Oceans and Airspace




nm - nautical mile ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்கள் கட்டுரையில் உள்ளன.

**கடல்எல்லை ஆனது ஒரு நாட்டின் ஆளுகைக்குட்பட்ட கடற்பரப்பு (territorial waters), அண்மை கடற்பரப்பு (contiguous zone), பொருளாதார தனியுரிமை பகுதி (Exclusive Economic Zone - EEZ) மற்றும் கண்டத்திட்டு என்று நான்கு பகுதிகளாக வரையறுக்கப்படுகிறது.**

### தளக்கோடு (Base line) எவ்வாறு தீர்மானிக்கப்பட்டது?

எல்லையோரக் கடலின் அகலமாக 12 மைல்களை கடற்கரையின் எந்த ஆதாரக் கோட்டை / தளக் கோட்டை அடிப்படையாக வைத்து அளப்பது என்பது மற்றுமொரு சர்வதேசப் பிரச்சினையாக இருந்தது. இது தொடர்பாக இருவேறு கருத்துக்கள் நிலவியது. வளைந்து நெளிந்து செல்லும் கடற்கரையின் தாழ்நிலை நீர் எல்லைக்கு இணையாகச் செல்லும் கோடே எல்லையோரக் கடலை அளக்கும் அடி எல்லைக் கோடாக இருக்க வேண்டும் என்பது ஒரு கருத்தாகும். அவ்வாறின்றி அது கடற்கரை செல்லும் பொதுவான போக்கின் அடிப்படையில் கடலுக்குள் நீட்டிக் கொண்டிருக்கும் நிலப்பகுதிகளை இணைக்கும் கோடே எல்லையோரக் கடலை அளக்கும் தளக்கோடாக (Base line) இருக்க வேண்டும் என்பது மற்றொரு கருத்தாகும்.

நோர்வே மீன்பிடி வழக்கில் சர்வதேச நீதிமன்றம் இரண்டாவது கருத்தையே ஏற்றுக் கொண்டது.

**Anglo-Norwegian Fisheries case** (1951)- என்ற வழக்கில், 1938 ஆம் ஆண்டு ஜூலையில் நோர்வே தனது அரசாணையின் மூலம் தனது நாட்டின் மீன்பிடி மண்டலத்தை வரையறை செய்து வெளியிட்டது. அவ்வாறு வரையறுக்கும் போது, நிலத்திலும் நிலப்பகுதிக்கு அருகாமையில் இருக்கும் தீவுகள், பாறைகள் ஆகியவற்றின் மீது தேர்ந்தெடுக்கப்பட்ட 48 புள்ளிகளின் வழியாக வரையப்பட்ட தளக்கோட்டை (Base line) அடிப்படையாகக் கொண்டு வரையறை செய்தது. இந்த தளக் கோட்டிற்கும் அதற்கு இணையாக 4 மைல்கள் வரையுள்ள கோட்டிற்கும் இடைப்பட்ட பகுதியே தன் நாட்டிற்கு மட்டும் உரிமையுள்ள மீன்பிடி மண்டலம் என நோர்வே அறிவித்தது. இதன் விளைவாக கடலின் ஒரு பெரும் பகுதியை மற்ற அண்டை நாடுகளை விலக்கி விட்டு நோர்வே தனியுரிமை கோரியது. நோர்வே வரைந்த அந்த தளக்கோடு (Base line) சர்வதேசச் சட்டத்திற்கு முரணானது என்று இங்கிலாந்து ஆட்சேபனை தெரிவித்தது. இப்பிரச்சினை சர்வதேச நீதிமன்றத்தின் விசாரணைக்கு அனுப்பப்பட்டது. சர்வதேச நீதிமன்றம் நோர்வே வரைந்த தளக்கோடு (Base line) சர்வதேசச் சட்டத்திற்கு முரணானாது அல்ல என்று முடிவு செய்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலந்துரையாடப்பட்ட விடயங்களை தெளிவுபடுத்த வேண்டும்-ஐ.ம.ச.

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சருடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் இதனைத் தெரிவித்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் மற்றும் திரவ இயற்கை எரிவாயு தொடர்பில் கலந்துரையாடியுள்ளமை ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கை அரசாங்கத்தினால் தயாரிக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பில் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டுமென இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்திருந்தமை குறித்தும் அவர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

# கிழக்கில் தொற்றாளர் எண்ணிக்கை 1500 ஐ தாண்டியது

(கல்முனை)

கிழக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 1500ஐ கடந்துள்ளது.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் தொகை அதிகரித்து வருவதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு-எப்படி



## தல விருட்ச மகிமை

(தொடர்ச்சி)

சிவனுக்கு மிகவும் பிடித்த வில்வத்துக்கு நிர்மால்ய தோஷம் எதுவும் கிடையாது. அதாவது வில்வத்தைப் பறித்து எத்தனை நாட்களானாலும் பூஜை செய்ய பயன்படுத்தலாம். மற்ற மலர்களுக்கு இந்தப் பெருமை கிடையாது.

பொதுவாக ஒரு தல விருட்சத்தின் இலை, கனி என அனைத்தும் அத்தல மூலவருக்கே உரியது. அவற்றை இறைவனுக்குத் தான் சமர்ப்பணம் செய்ய வேண்டுமே தவிர பக்தர்கள் தங்கள் சொந்த காரணங்களுக்காகப் பயன்படுத்தக்கூடாது.

பெரும்பாலான ஆலயங்களில் தல விருட்சத்தைச் சுற்றி நாகர் சிலைகளை வரிசையாக வைத்து பிரதிஷ்டை செய்திருப்பார்கள். நோய் நீங்க, குழந்தை பாக்கியம் பெற விரும்புபவர்கள் இத்தகைய தல விருட்சங்களைச் சுற்றி வந்து வழிபட்டு வந்தால் நிச்சயம் நல்ல பலன் கிடைக்கும். சில கோவில்களில் தல விருட்சத்தின் கீழ் பக்தர்கள் படுத்துத் தூங்குவார்கள்.

ஒருபோதும் தல விருட்சம் கீழ் படுத்துத் தூங்கக் கூடாது. ஏனெனில் நம் மறைந்த முன்னோர்கள், தவம் இருந்த சித்தர்கள், ரிஷிகள், தேவர்கள் அந்தத் தல விருட்சத்தில் சூட்சும வடிவில் இறங்கி வழிபாடுகளை செய்வார்கள் என்கிறார்கள்.

தல விருட்சத்தை எந்தக் காரணம் கொண்டும் சீரமைப்பு செய்வதாகக் கூறி வெட்டக் கூடாது. அது நல்லதல்ல. சில கிராமங்களில் விபரம் தெரியாமல் தல விருட்சத்தை வெட்டி விடுவார்கள். அதன் பிறகு அந்த ஊரில் யாருக்குமே சாமி ஆட அருள்வராமல் போய் விடும். இது நிதர்சன உண்மையாகும்.

எனவே தல விருட்சங்களுக்கு உரிய மரியாதை கொடுக்க வேண்டும். முடிந்தால் தினமும் தல விருட்சத்துக்கு ஒரு குடம் தண்ணீர் ஊற்றி வழிபாடு செய்ய வேண்டும். அப்படி வழிபாடு செய்து வந்தால் நினைத்தது நிறைவேறும். லட்சுமி நரசிம்மர், சுதர்சனர் வீற்றிருக்கும் ஆலயங்களில் வில்வ மரம் தல விருட்சமாக இருக்கும். அந்த ஆலய வழிபாடு லட்சுமி கடாட்சத்தைப் பெருக்கும்.

சில கோவில்களில் ஆண் மரமான அரச மரமும் பெண் மரமான வேம்பும் பின்னிப்பிணைந்து வளர்ந்திருக்கும். அவற்றுக்கு மஞ்சள், குங்குமம், சந்தனம் பூசி வழிபடலாம்.

சிலர் வெளியே சொல்ல முடியாத அளவுக்கு பிரச்சினைகளால் மனம் வெதும்பி போய் இருப்பார்கள். அவர்கள் தினமும் அதிகாலை 5 மணிக்கு அரச மரத்துக்கு தீபம் காட்டி வழிபட்டு 21 தடவை வலம் வந்து வணங்கினால் நிச்சயம் துன்பங்கள் தீர்ந்து விடும். அரச மரத்தில் மும்மூர்த்திகளும் வாசம் செய்வதாக சொல்வார்கள்.

வேதாந்த இரகசியத்தை ஒரு அரச மரத்தை வைத்து பகவான் கண்ணன் பகவத்கீதை 15 ஆவது அத்தியாயத்தில் கூறி இருப்பதில் இருந்து இதன் சிறப்பை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம். தல விருட்சங்களில் இன்னும் ஏராளமான இரகசியங்கள் புதைந்து கிடக்கின்றன. ஒவ்வொரு இராசிக்காரர்களும் எந்தெந்த தல மரத்தை வழிபட வேண்டும் என்பதை அடுத்துக் காணலாம்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## சடலம் கண்டெடுப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு- தேற்றாத்தீவு கடற்கரையை அண்டிய வாவிப்பகுதியில் ஆணொருவரின் சடலம் நேற்று வெள்ளிக்கிழமை கரையொதுங்கியுள்ள நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் சடலமாக கண்டெடுக்கப்பட்டவர் 60 வயது மதிக்கத்தக்கவர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், இதுவரை அவர் தொடர்பாக எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை எனவும் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-4)

## 261 பேர் நாடு திரும்பினர்



(கொழும்பு)

கொரோனாத் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 261 இலங்கையர்கள் நேற்று வெள்ளிக்கிழமை நாடு திரும்பினர்.

இந்தியாவிலிருந்து 29 பேரும் கட்டாரிலிருந்து 30 பேரும் ஜப்பானிலிருந்து 45 பேரும் அவுஸ்திரேலியாவிலிருந்து 157 பேரும் கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்றுக் காலை வந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பின்னர் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர். (நி-4)

## இணையத்தள மோசடி அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் முன்னெடுக்கப்படும் இணையத்தள மோசடிகள் அதிகரித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

இலங்கையிலுள்ளவர்களின் மின்னஞ்சல் முகவரிகளை பயன்படுத்தி, அதனூடாக இணையத்தள மோசடிகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நுகேகொடை பகுதியில் வசிக்கும் நைஜீரிய பிரஜை ஒருவரும் மருதானை மற்றும் வெல்லம்பிட்டி பகுதிகளில் வசிக்கும் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-4)

## விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

இலஞ்சம் பெற்றமை தொடர்பில் கைது செய்யப்பட்ட கண்டி நகர சபையின் இரண்டு உறுப்பினர்களும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிரதம நீதவான் மொஹமட் மிஹார் முன்னிலையில் சந்தேக நபர்கள் ஆஜர்படுத்தப்பட்ட போதே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கண்டி நகர எல்லைக்குள் டிஜிற்றல் பதாகை ஒன்றை பொருத்துவதற்கு உதவி புரிவதற்காக வர்த்தகர் ஒருவரிடம் ஒன்றரை இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்ற போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## பூவா, தலையா?



ஒருமுறை ராஜா எதிரிகளை தாக்க ஓர் இராணுவ படை ஒன்றைத் தயார் செய்து, போருக்கு தயாரானார். அவர் "எப்படியும் இந்த போரில் வெற்றி பெறுவோம்" என்று நம்பிக்கையுடன் இருந்தார்.

ஆனால் அந்த படையினரோ பெரும் சந்தேகத்துடனேயே இருந்தனர். இதனால் அந்த ராஜா தன் படை வீரர்களுக்கு தைரியத்தை வரவழைக்க என்ன செய்யலாம் என்று ஒரு துறவியைப் பார்த்துக் கேட்கச் சென்றார்.

அப்போது அந்த துறவி ராஜாவிடம், ஒரு யோசனையை சொன்னார். அதே போல் ராஜாவும் செய்தார்.

அது என்னவென்றால், அந்த ராஜா போர் செல்லும் வழியில், அவர்கள் குல தெய்வ கோவிலில் நிறுத்தி பிரார்த்தனை செய்து, ஒரு நாணயத்தை எடுத்து வீரர்களின் முன் "நான் இப்போது இந்த நாணயத்தை சுழற்றி விடுவேன், தலை விழுந்தால் நாம் வெற்றி பெறுவோம் இல்லையேல் போரில் தோற்போம்" என்று துறவி சொன்னதைச் சொல்லி, பின் அவர்களிடம் "நம் தலைவிதியை இந்த நாணயம் சொல்லும்" என்று கூறிய படி நாணயத்தைச் சுழற்றினார்.

அனைவரும் அதைக் கூர்ந்து கவனித்தனர். அப்போது தலை விழுந்தது. அதனால் அந்த வீரர்கள் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்று நம்பிக்கையுடனும் சந்தோசத்துடனும் எதிரிகளை தாக்கி வெற்றிப் பெற்றனர்.

யுத்தத்திற்கு பின்னர், துணை அமைச்சர் "விதியை யாராலும் மாற்ற முடியாது." என்று ராஜாவிடம் சொல்ல "ஆம், என்று ராஜா சொல்லி இது விதியல்ல அமைச்சரே மதி அந்த நாணயத்தின் இரு பக்கத்திலும் தலை இருப்பதை" காண்பித்தார். நம்பிக்கையுடன் செயற்பட்டால் எத்தகைய காரியத்தையும் எளிதில் வெல்லலாம், விதியையும் மாற்றி அமைக்கலாம்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## முடிச்சுக்கள் அவிழ்ந்தன




வணக்கம் மன்னரே. கம்மிய குரலில் பேசிய பிலிப் தன்னை அறிமுகம் செய்துகொண்டார். இலேசாக கண் விழித்துப் பார்த்த அலெக்சாண்டர் சொல் என்பது போல தலையசைத்தார். என்னிடம் மருந்து ஒன்று இருக்கிறது. அது கொஞ்சம் ஆபத்தானது. ஆனால் உங்களுடைய நோய் குணமாகிவிடும். நிச்சயம். ஆனால்...

என்ன ஆனால்...? மருந்தைச் சாப்பிட்ட சில நாட்களுக்கு நீங்கள் மயக்க நிலையிலேயே இருக்க வேண்டியிருக்கும். அதன்பிறகு தான் மயக்கம் தெளியும். அதைச் செய்வதற்கு முன்னர் ஒரு முக் கியமான விடயம் பேசவேண்டும். தயங்காமல் சொல் பிலிப்.

அந்த மருந்தை உங்களிடம் தருவதற்கு முன்னர் அனைவருடைய சம்மதமும் தேவை. முக்கியமாகத் தங்களுடைய சம்மதம் தேவை. சரி, அந்த மருந்தின் பெயர் என்ன?

மன்னா நீங்களே ஒரு மருத்துவர்தான். மருத்துவமேதை அரிஸ்ரோட்டிலிடம் பாடம் பயின்றவர். உங்களுக்குத் தெரியாததல்ல. இருந்தாலும் சொல்கிறேன். சொல்லிவிட்டு அலெக்சாண்டரின் காதில் மருந்தின் பெயரைக் கிசுகிசுத்தார் மருத்துவர் பிலிப்.

அலெக்சாண்டரின் முகத்தில் புன்னகை. ஆகட்டும். உற்சாகம் கொப்பளிக்க மருந்து தயாரிக்கும் பணியில் ஈடுபட்டார் பிலிப். மன்னா பார்மீனியோவிடம் இருந்து தங்களுக்குக் கடிதம் வந்திருக்கிறது. கொண்டுவா சீக்கிரம். கடிதத்தைப் பிரித்துப் படித்தார் அலெக்சாண்டர்.

மருத்துவன் பிலிப் பாரசீக மன்னனின் கையாள். டேரியஸ் கொடுக்கும் வெகுமதிகளுக்காக உங்கள் உயிரை அவனுக்குத் தரப் போகிறான். கடிதத்தில் இருந்த வரிகள் அலெக்சாண்டரை அதிர்ச்சியடை வைத்தன.

இருந்தாலும் அதை அவர் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. கடிதத்தைப் பத்திரமாக வைத்தார். அசதியில் தூங்கிவிட்டார்.

மன்னா, மருந்து தயார். வார்த்தைகளுக்குச் சொந்தமானவர் பிலிப் என்பது தெரிந்து படுக்கையில் இருந்து எழுந்தார் அலெக்சாண்டர்.

எதிரே பயபக்தியோடு பிலிப். கையில் மருந்துக்குடுவை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரமும் ஏமாற்றமும் அறநெறி நிற்கப் போதுமான அறிவில்லாத மூடர் செயலாகும்.

– ஃபிராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# தமிழ் மக்களின் ஒற்றுமை பொருளுணர்ந்து கொள்க

வடக்கு கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த அ.வரதராஜப்பெருமாள் ஒரு முறை யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தியிருந்தார்.

அந்தச் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் வரதராஜப்பெருமாளைப் பார்த்து; நீங்கள் அனைவரும் – அனைத்துத் தரப்புகளும் ஒன்றுபட்டு ஓரணியில் நின்றால் என்ன? என்று கேட்டார்.

அதற்கு வரதராஜப்பெருமாள்; நாங்கள் அப்படி ஓரணியில் வருவதாக இருந்தால், பத்திரிகையாளர்களாகிய நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக ஒரு பத்திரிகையை வெளியிடுங்கள் என்றார்.

இவ்வாறு கூறிய வரதராஜப்பெருமாள்; அரசியல், அரசியல்சார் அமைப்புகள் என்றால் அவற்றிடம் கொள்கைகளும் அவற்றை அடைகின்ற மார்க்கங்களும் வேறுபடும்.

எனவே அரசியல் தரப்புகள் ஒற்றுமைப்படுதல் என்பது முழுமையாகச் சாத்தியப்படக் கூடியதல்ல. இஃது உலகம் முழுமைக்கும் பொருந்தும் என்று பதில் அளித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் இந்தியாவுடன் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டுள்ளவர்.

அன்று அவர் கூறிய பதிலை இப்போது நினைத்துப் பார்க்கின்றேன்.

இந்த நினைவுபடுத்தலுக்குக் காரணம் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரின் கருத்து என்பதையும் இவ்விடத்தில் பதிவிட வேண்டும்.

ஆம், தமிழ்த் தரப்புகள் அனைத்தும் ஓரணியில் நின்றால் இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க முடியும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கூறியது எதற்கானது என்ற கேள்விகள் எழவே செய்யும்.

இந்தக் கேள்விகளுக்கு அப்பால், தமிழ் அரசியல் தரப்புகள் ஓரணியில் நின்றால் இலங்கைக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க முடியும் என இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கூறிய விடயம் சாட்டுப்போக்கானது என்று கருதுவதற்கும் இடமுண்டு.

ஏனெனில், பொதுவில் தமிழ்த் தரப்புகள் எவையும் இந்தியாவின் தலையீட்டை எச்சந்தர்ப்பத்திலும் நிராகரிக்கவில்லை. தவிர இந்தியாவின் தலையீடு இல்லாமல் – இந்தியாவின் அழுத்தம் பிரயோகிக்கப்படாமல் ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு சாத்தியமாகாது என்ற நிலைப்பாட்டில் அனைத்துத் தமிழ்த் தரப்புகளும் உறுதியாக இருக்கின்றன.

அதேசமயம் அரசாங்கத் தரப்பில் இருக்கக்கூடிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் எங்களுக்குத் தீர்வு வேண்டாம் என்று கூறவும் இல்லை.

அவர்களும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தேவை என்பதில் ஒரே கருத்தைக் கொண்டிருக்கின்றனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கைக்கு இந்தியா அழுத்தம் கொடுப்பதில் தமிழ்த் தரப்புகளின் அரசியல் பிரிபாடல் எத்தகைய தடையை ஏற்படுத்துகின்றது என்பது தான் புரியாத புதிராக உள்ளது.

# விமல் வீரவன்சவுக்கு எதிராக ரிசாத் முறைப்பாடு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கைகள் வெளிவருவதற்கு முன்னர், அது தொடர்பில் தன்னை சம்பந்தப்படுத்தி குற்றஞ்சுமத்தியுள்ள அமைச்சர் விமல் வீரவன்சவின் நடவடிக்கைகள் குறித்து, அதே ஆணைக்குழுவில் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாத் பதியுதீன் நேற்று (வெள்ளிக்கிழமை) முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், விமல் வீரவன்சவின் இனவாதக் கருத்துக்களையும் அப்பட்டமான பொய்களையும், பிழையான குற்றச்சாட்டுக்களையும் கண்டித்ததுடன் அது தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு உரிய கவனம் செலுத்துமெனவும் நம்பிக்கை வெளியிட்டார். (நி-4)

# கொடிகாமத்தில் விபத்து; சிறுவன் படுகாயம்

(கொடிகாமம்)

கொடிகாமம் நகர்ப் பகுதியில் நேற்று பிற்பகல் துவிச்சக்கரவண்டியில் பயணித்த சிறுவனை மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாக்கியதில் சிறுவன்படுகாயமடைந்துள்ளார்.

கொடிகாமம் நாவலடிப் பகுதியைச் சேர்ந்த 12 வயதான இ.கலஷ்சன் என்ற சிறுவனே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-3,30)

# அரிசி ஆலைகளுக்கு கடன் வசதிகள்

## பிரதமர் ஆலோசனை

(கொழும்பு)

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி உற்பத்தியாளர்களுக்கு கடன் வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஆலோசனை வழங்கினார்.

அகில இலங்கை சிறிய மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுடன்இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாரியளவிலான அரிசி உற்பத்தியாளர்களின் பிரச்சினைகளுக்கு முன்னர் சிறிய மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

நாட்டில் காணப்படும் உத்தரவாத நெல் விலைக்கு ஏற்ப பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் 6 மாதங்களுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்படும் அரிசிக்கான நிலையான விலையை பெற்றுக் கொடுப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இக் கலந்துரையாடல் இடம் பெற்றது. (நி-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ் . பிரதேசத்தில்** கோணாந்தோட்டம், ஆஸ்பத்திரி வீதி காரைநகர் வீதி சந்தியிலிருந்து கே.கே.எஸ்.வீதி சந்தி வரை, கொட்டடி, சீனிவாசகம் வீதி, முத்தமிழ் வீதி சிவன் பண்ணை வீதியின் ஒரு பகுதி, கே.கே.எஸ் வீதி துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து சத்திரச்சந்தி வரை, பிரதான வீதி துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து விஜிதா கபே வரை, சப்பல் வீதி, யாழ். 1 ஆம், 2 ஆம், 3 ஆம்,4 ஆம் குறுக்குத் தெருக்கள் வேம்படி வீதி சந்தி வரை, யாழ்.பொலிஸ் நிலையம்,யாழ். துரையப்பா விளையாட்டரங்கு, இலங்கைத் தொலைத்தொடர்பு நிலையம், யாழ்.பொது நூலகம், மாவட்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதி, தேசிய நீர் வழங்கல் வடிகால் சபையின் பிராந்திய முகாமையாளர் அலுவலகம், STS வைத்தியசாலை, அஞ் சல் திணைக்களம், தொழில் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் **Palmyra house,** கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற்சாலை, **Pal myrah house** கரை சல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, **New Silk Road,** தோட்டவெளி, **Timex** ஆடைத் தொழிற்சாலை, **Industrial Estate,** மன்னார் வைத்தியசாலை, ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை,

மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட்சிற்றி, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், உயிலங்குளத்திலிருந்து சிறுநாவற் குளம் வரை, கமலாம்பிகை அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



## பொறுப்பவர் பூமியாள்வார்

❖ எப்போதும் இனிமையோடும், புன்னகையோடும் இருப்பது ஒருவனைக் கடவுள் அருகில் கொண்டு செல்லும்.

❖ மனித வடிவம் கொண்ட ஒவ்வொரு உயிரினையும் வழிபடுங்கள், இறைவனை அனைத்து வடிவத்திலும் வழிபடுவதே நன்மை பெற நல்ல வழி.

❖ இறைவனின் படைப்பான அனைத்து உயிர்களுக்கும் இரக்கத்துடன் பணி செய்தல் மிக நன்று.

❖ பூமிதேவியைப் போன்று அனைத்தையும் பொறுப்பவர் ஆக இருக்க வேண்டும். பொறுமையோடு இருந்தால், உலகமே உங்கள் காலடியில் அமரும்.

❖ கீழ்ப்படிதலை அறிபவனே கட்டளையிடவும் அறிவான்.

❖ ஒன்றாகக் கூடி வாழ்தலே நமக்கு வேண்டிய ஒன்றாகும். சேர்ந்து வாழ்தலே சிறந்த வலிமை.

❖ ரகசியமாகப் பிறரைக் குறை கூறுவது பாவம். முதலில் நீ அதை முழுவதும் நீக்க வேண்டும். மன்னித்து மறந்தால் மகிழ்ச்சி நிலவும்.

❖ அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறொன்றுமே நமக்குத் தேவையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள்

## 01.01.2021 முதல் 31.12.2021 வரை



நல்ல மாற்றங்கள் இல்லம் தேடி வரும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

### மிதுன இராசி வாசகர்களே!

வந்துவிட்டது புத்தாண்டு. வளர்ச்சியிலும் தளர்ச்சியிலும் சிக்கித்தவித்த உங்களுக்கு இனி மலர்ச்சி கிடைக்கப் போகின்றது. 'ஆண்டின் தொடக்கத்தில் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் வந்துவிட்டதே' என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம். சனியோடு குரு பகவான் வீற்றிருந்து நற்பலன்களை வழங்குவதற்கு வழிவகுத்துக் கொடுப்பார். பொதுவாகச் சனி தன் சொந்த வீட்டில் சஞ்சரிப்பதால் பெரியளவில் பாதிப்புகளை உருவாக்க மாட்டார். ஆயினும் தொழில் மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றம் போன்ற மாற்றங்கள் உருவாகும் விதத்தில் தானாகவே மாறுபாடு ஏற்படும்.

குருச்சந்திர யோகத்தோடும் நீச்சபங்க இராஜயோகத்தோடும் இந்த ஆண்டு பிறக்கின்றது. தன ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் எதிர்பார்க்கும் நேரங்களில் தனவரவு கிடைத்து எப்படியாவது காரியத்தை முடித்து விடுவீர்கள்.

### புத்தாண்டின் தொடக்க நிலை

உங்கள் இராசிநாதன் புதன் அஷ்டமத்தில் மறைந்திருக்கின்றார். 'மறைந்த புதனால் நிறைந்த தன இலாபம் கிடைக்கும்' என்பார்கள். எனவே தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் வளர்த்துக்கொள்ளுங்கள். சூரிய பலம் ஏழில் இருப்பதால் பொதுவாழ்வில் திடீர் முன்னேற்றங்கள் வரலாம். பிரபலஸ்தர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பல காரியங்களை முடித்துக்கொடுப்பர். ஆயினும் உங்கள் முன்கோபத்தின் காரணமாக சில நல்ல வாய்ப்புகளை இழக்கவும் நேரிடும். உங்கள் இராசிக்கு பஞ்சம - விரயாதிபதியான சுக்கிரன் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். பிள்ளைகளால் விரயம் உண்டு. 'பிள்ளைகள் நம் சொற்படி கேட்கவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். 12 இல் ராகுவும் 6 இல் கேதுவும் இருக்கின்றார்கள். விரய ஸ்தானத்தில் ராகு இருந்தாலும் பணம் தேவைப்படும் நேரங்களில் வந்து கொண்டே இருக்கும்.

எதிரிகள் ஸ்தானத்தில் கேது இருப்பதால் மறைமுக எதிர்ப்புகள் உருவாகலாம். 6 ஆம் இடத்திற்கு அதிபதியாக செவ்வாய் விளங்குவதால் ஒருசில உடன்பிறப்புகள் உங்களுக்கு ஆதரவு தராமல் இருக்கலாம். அவர்களை அரவணைத்துச் செல்வதன் மூலம் குடும்ப பிரச்சினைகளுக்கு நல்ல முடிவு காண இயலும். தொழில் ஸ்தானாதிபதியான குரு நீச்சம் பெற்றிருப்பதால் இந்த ஆண்டு முழுவதும் தொழில் வளம் ஏற்ற இறக்கமாகவே இருக்கும்.

### மகர குருவின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு பகவான் இப்பொழுது அஷ்டமத்தில் சஞ்சரிக்கின்றார். அஷ்டமத்தில் சஞ்சரித்தாலும் அவர் பார்வைபடும் இடங்கள் எல்லாம் புனிதமடைந்து நல்ல பலன்கள் உங்களுக்கு கிடைக்கும். உங்கள் இராசியைப் பொறுத்தவரை கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற குரு பகவான் நீச்சம் பெற்று சஞ்சரிப்பதால் அஷ்டமத்து குருவால் அதிக அளவில் பாதிப்புகள் ஏற்படாது. இருப்பினும் நீங்கள் எதைச் செய்ய நினைத்தாலும் அதை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து செய்தால் நன்மை ஏற்படும். களத்திர ஸ்தானம் எனப்படும் ஏழாமிடத்திற்கு அதிபதியாக குருபகவான் விளங்குவதால் குடும்பத்தில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவதன் மூலமே ஒற்றுமை பலப்படும். குரு நீச்சம் பெற்றிருப்பதால் பிள்ளைகளையும் உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வதே சிறந்தது.

தொழில் ஸ்தானாதிபதியாக விளங்கும் குரு பகவான் இந்த ஆண்டு நீச்சம் பெறுகின்றார். இருப்பினும் நீச்சம் பெற்ற குரு பகவான், ஆட்சி பெற்ற சனியோடு இணைந்திருப்பதால் 'நீச்ச பங்க இராஜயோகம்' ஏற்படுகின்றது. எனவே தடம் மாறிச் சென்ற தொழில், இனி தனவரவைக் கொடுக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, வரும் மாற்றங்கள்




நல்ல மாற்றங்களாகவே இருக்கும். பணியிட மாற்றங்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்து கொடுக்கும்.

### குருவின் பார்வை பலன்கள்

புத்தாண்டில் மகரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. கும்பத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை 1, 3, 5 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. அந்த அடிப்படையில் மகர குருவின் சஞ்சார காலத்தில் விரய ஸ்தானத்திலும் தன ஸ்தானத்திலும் குரு பகவான் பார்வை பதிவதால் விரயத்திற்கேற்ற பணவரவு வந்து கொண்டே இருக்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். இல்லம் கட்டும் வாய்ப்பு கைகூடும். மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான வழிபிறக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இடமாற்றங்கள் உறுதியாவதோடு எதிர்பார்த்த ஊதியமும் கிடைக்கலாம்.

கும்ப குருவின் சஞ்சார காலத்தில் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவது யோகம்தான். கோடி நன்மை தரும் குருவின் பார்வை என்பதால் உடல் நலம் சீராகும். உள்ளத்தில் உற்சாகம் குடிகொள்ளும். கடமையில் ஏற்பட்ட தொய்வு அகலும். கல்யாண முயற்சிகள் கைகூடும். அரசு வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கைகூடலாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் ஆதரவோடு உன்னத நிலையைக் காண்பர். வாகனம் வாங்க, வீடு கட்ட, கேட்ட சலுகைகள் கிடைக்கும். சகோதர சச்சரவுகள் அகலும்.

### குருவின் வக்கிர காலம்

16.6.2021 முதல் 13.9.2021 வரை கும்ப இராசியில் குரு வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் வாழ்க்கைத் துணை வழியே சில பிரச்சினைகள் வந்து அகலும். நீங்கள் நல்லது செய்ய நினைத்தாலும் அது தீமையாகவே தெரியும். தொழிலில் சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும்.

14.9.2021 முதல் 13.10.2021 வரை மகர இராசியில் குரு வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் எதிர்பாராத இழப்புகள் ஏற்படலாம். வளர்ச்சி ஏற்படும் என்று நீங்கள் நினைத்த ஒரு காரியம் விரயத்தை உருவாக்கிவிடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு குறையும். சகப் பணியாளர்களால் உங்கள் முன்னேற்றம் குறையலாம். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையால் பிரச்சினைகள் ஏற்படும். கூட்டாளிகளின் குணமறிந்து நடந்து கொள்ள வேண்டிய நேரம் இது. ஆரோக்கியத்தில் மீண்டும் மீண்டும் அச்சுறுத்தல் தோன்றலாம். விலை உயர்ந்த பொருட்களை கையாளும் பொழுது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

### சனியின் வக்கிர காலம்

12.5.2021 முதல் 26.9.2021 வரை மகரத்தில் சனி வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 8, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அஷ்டமாதிபதி வக்கிரம் பெறுவது நன்மைதான். என்றாலும் 9 ஆம் இடத்திற்கும் அதிபதியாக அவர் விளங்குவதால் திடீர் திடீரென மாற்றங்கள் வந்து கொண்டே இருக்கும். தெய்வீக சிந்தனைகளின் மூலமே அவற்றை நல்ல விதமாக மாற்றிக்கொள்ள இயலும். உடல்நலத் தொல்லை, உடன் இருப்பவர்களால் தொல்லை போன்றவை உருவாகும். உங்கள் முன்னேற்றத்திற்கு உறவினர்களே முட்டுக்கட்டையாக இருக்கலாம். உத்தியோகத்தில் நீண்ட தூரத்திற்கு மாறுதல் வந்து சேரலாம். நிச்சயிக்கப்பட்ட காரியங்களில் சில மாற்றங்கள் ஏற்படும். பங்காளிப் பகை அதிகரிக்கலாம். மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதில் தாமதம் ஏற்படலாம். இதுபோன்ற காலங்களில் சனி கவசம் பாடிச் சனி பகவனை வழிபடுவது நல்லது.

### கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்

14.4.2021 முதல் 3.6.2021 வரை மற்றும் 4.6.2021 முதல் 21.7.2021 வரையான காலகட்டம், செவ்வாய்-சனி பார்வை காலமாகும். இக்காலத்தில் மிகமிக விழிப்புணர்ச்சியோடு செயற்பட வேண்டும். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். 8, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. எனவே அவற்றின்? பார்வை காலத்தில் உத்தியோகத்தில் இருந்து திடீரென விலக நேரிடலாம். மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும். நிதானமும் பொறுமையும் மிக மிகத் தேவை. எந்தக் காரியமும் முடிவடைவதற்கு முன்னால் வெளியில் சொல்லாதிருப்பது நல்லது. வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த தகவல் தாமதப்படும். பெற்றோர்களின் ஆரோக்கியத்தில் திடீர் பாதிப்புகள் ஏற்படலாம். விரயங்கள் அதிகரிக்கும். குடும்பத்தினர் உங்கள் மீது குறைகூறிக் கொண்டே இருப்பர். 'பிள்ளைகள் படிப்பில் கவனம் செலுத்தவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். உதவி செய்த உறவினர்கள் உங்கள் மீது பகை உணர்ச்சி கொள்வர்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

உங்கள் இராசிநாதன் புதன் என்பதால் மகாவிஷ்ணுவை வழிபடுவது நல்லது. அனுகூல நட்சத்திரமன்று, நின்ற கோலத்து பெருமாள் வழிபாட்டை மேற்கொள்வதன் மூலம் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

### பெண்களுக்கான பலன்கள்

இந்தப் புத்தாண்டில் உங்களுக்கு தன்னம்பிக்கை அதிகம் தேவை. வாழ்க்கைத் துணையோடு அனுசரித்துச் செல்வது நல்லது. தாய் மற்றும் சகோதர வர்க்கத்தினர் உங்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்வது சந்தேகம்தான். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. சனி-செவ்வாய் பார்வை காலத்தில் நிதிப்பற்றாக்குறை உருவாகி கடன் வாங்கும் சூழ்நிலையும் உருவாகலாம். பிறரை நம்பி செய்த காரியங்கள் முடிவடையாமல் போகலாம்.

ஒவ்வாத உணவுகளை உட்கொண்டு உடல்நலக்குறைவு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள். பணி புரியும் பெண்கள் தங்கள் பொறுப்பைப் பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாட்டுடன்...

ளான இளம் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் தருமபுரம் கிழக்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான உதயசேகர் கருணாகரன் (வயது-28) என்ற இளம் குடும்பஸ்தரே மரணமடைந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

உயிரிழந்த குடும்பஸ்தர் கடந்த 5ஆம் திகதி இரவு கிளிநொச்சியிலிருந்து தருமபுரம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார்.

இதன்போது முரசுமோட்டைப் பகுதியில் வீதியில் நின்ற மாட்டுடன் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில், சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-3,316)

## மருதனார்மடம்...

மேலும் 5 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் 5 பேருக்கும் தொற்று உள்ளதாக அறிக்கை கிடைத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் மருதனார்மடம் கொத்தணியால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 156ஆக உயர்வடைந்துள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த மூன்று பேருக்கும் கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கும் இவ்வாறு தொற்று உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் மன்னாரில் இருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18)

## தமிழ் இளைஞர்...

மான அரசல்ல. ஒரே நாடு, ஒரே சட்டம் என அரசாங்கத்தின் எல்லா உறுப்பினர்களும் கூறி வருகின்றனர்.

ஆனால், நடைமுறையில் எமக்கென வேறு சட்டம் நீதிக்கு முரணான வகையில் பின்பற்றப்படுகின்றது. இதுதான் யதார்த்தம். உங்களைப் பொறுத்தவரையில் நாம் வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள்.

ஆகவே, எமக்கான நீதியை நாம் தான் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக பெற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன்.

நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கம் எல்லா இலங்கை மக்களுக்குமான அரசாங்கம் அல்ல என்பதை சொல்லிலும் செயலிலும் நிரூபித்து வருகின்றது. தங்களுக்கு வாக்களித்த பௌத்த சிங்கள மக்களின் விருப்பங்களுக்கு அமைவாகவே செயற்பட முடியும் என்று ஜனாதிபதி மற்றும் அரசாங்க உறுப்பினர்கள் வெளிப்படையாகவே கூறி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் மிருசுவில் பிரதேசத்தில் மூன்று சிறுவர்கள் உட்பட எட்டு தமிழர்களை படுகொலை செய்தமைக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் இராணுவ அதிகாரி சுனில் ரத்னாயக்கவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மன்னிப்பு அளித்து கடந்த வருடம் மார்ச் 26ஆம் திகதி அன்று விடுதலை செய்துள்ளார். அதுவும் எந்தவித யுத்தமும் இடம்பெறாத இடத்தில் அவர் இந்தப் படுகொலையைச் செய்திருந்தார்.

குறிப்பாக சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு துறைகளில் வேலை செய்பவர்கள் தவறிழைத்தால் அவர்களுக்கான தண்டனையைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவதே வழமையான நடைமுறையாகும்.

ஆனால் இங்கு தமிழர்களைப் படுகொலை செய்பவர்களுக்கே பதவி உயர்வுகளும் பதக்கங்களும் மன்னிப்புக்களும் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இத்தகைய காரணங்களினால்தான் கடந்த காலங்களில் எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஒரே நாடு, ஒரே சட்டம் என அரசாங்கத்தின் எல்லா உறுப்பினர்களும் கூறி வருகின்றனர்.

ஆனால், நடைமுறையில் எமக்கென வேறு சட்டம் நீதிக்கு முரணான வகையில் பின்பற்றப்படுகின்றது. இதுதான் யதார்த்தம். உங்களைப் பொறுத்தவரையில் நாம் வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆகவே, எமக்கான நீதியை நாம் தான் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக பெற்றுக்கொள்ள வேண்டும்.

எமது இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் நியாயமானது என்பதை இன்று சர்வதேச ரீதியாக அரசாங்கத்தின் செயற்பாடுகளே நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளன என்றார். (ம-3)

## நினைவுத் தூபி...

முள்ளிவாய்க்காலில் இறுதிக்கட்டப் போரில் உயிரிழந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நினைவாக, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் நினைவிடம் ஒன்று மாணவர்களால் அமைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்தின் வழிகாட்டலுடன் முன்னெடுக்கப்பட்டுவந்த கட்டுமானப் பணிகளை இடைநிறுத்துமாறு உயர்கல்வி அமைச்சும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் 2018ஆம் ஆண்டு ஏப்ரலில் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு உத்தரவிட்டது.

எனினும், முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை அமைக்கும் பணிகள் மாணவர்களால் முடிக்கப்பட்டு நினைவேந்தல் நிகழ்வும் நடத்தப்பட்டது.

இந்த நிலையில் இரண்டரை ஆண்டுகளின் பின் அந்த நினைவிடத்தை தற்போதைய ராஜபக்ஷ அரசு இடித்தழித்துள்ளது. (ம-3,33)

## முள்ளிவாய்க்...

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை இடிப்பதற்கான தீர்மானத்தினை யாழ்.பல்கலைக்கழக நிர்வாகமே மேற்கொண்டது என்று யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சிறீசற்குணராஜா நேற்று இரவு தெரிவித்தார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பாதுகாப்புத் தரப்பு உட்பட்ட பல்வேறு தரப்புக்களால் தொடர்ந்தும் முன்வைக்கப்பட்ட அழுத்தம் காரணமாகவே இந்த முடிவுக்கு செல்ல நேர்ந்ததாக அவர் தெரிவித்தார்.

குறித்த தூபி சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளதால் அதனை அகற்றுவதற்கான தொடர்ச்சியான அழுத்தம் தம்மீது பிரயோகிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக நிர்வாகம் இவ்வாறான ஒரு முடிவை எடுக்காவிட்டிருந்தால் வேறு தரப்புக்கள் உள்நுழைந்து அதனை அகற்றியிருக்கக்கூடும் என்பதாலும் அவ்வாறு நடைபெறுவது பல்கலைக்கழகத்திற்கு அழகல்ல என்பதாலுமே தாம் இவ்வாறான ஒரு நடவடிக்கையை முன்னெடுத்ததாகவும் அவர் தெரிவித்தார். (ம-3)

## விப...

பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வீட்டில் வைத்த நகை களவு போனதால் அதனை தாங்கிக் கொள்ள முடியாத குறித்த இளைஞன் பொட்டாசியம் அருந்தி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## நாய்...

தர் ஒருவர் விபத்துக்குள்ளானதில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் கைதடி கோயிலாக் கண்டிப் பகுதியைச் சேர்ந்த இராசையா இராசநாகேஸ்வரன் (வயது-61) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 4ஆம் திகதி நாவற்குழிப் பகுதியில் குறித்த குடும்பஸ்தரும் அவரது மகனும் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது குறுக்கே நாய் பாய்ந்ததில் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## பொதுமக்கள்...

உயிரிழந்த மக்களின் நினைவாக அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபியை இடிக்கும் கோட்டாபய அரசின் மிலேச்சத்தனமான நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பல்கலைக்கழக நுழைவாயிலில் மாணவர்கள், பொது மக்கள் குவிய ஆரம்பித்துள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் பல்கலைக்கழக சூழலில் பெருமளவான பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்களிற்கும் பாதுகாப்பு தரப்பினருக்குமிடையில் பதற்றமான நிலைமை காணப்பட்டது.

பல்கலைக்கழகத்திற்குள் யாரும் நுழைய முடியாதபடி வெளிவாயில் பூட்டப்பட்டுள்ளது.

இதேவேளை பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த பிரதேச மக்கள், மாணவர்கள், வெளியிட மக்கள், அரசியல் தரப்பினர் அங்கு குவிந்து வருகிறார்கள். (ம-3)

*(நேற்று இச்செய்தி அச்சுக்கு போகும் வரை கிடைக்கப்பெற்ற தகவலின்படி)*


தன நிதானய
திகதி -2021.01.08
சீட்டிழுப்பு இலக்கம் - 398
Q 47 51 56 71

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 08.01.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2656
C 11 49 59 77

மெகா பவர்
திகதி 08/01/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0728
T 10 22 35 38 66

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/01/08
சீட்டிழுப்பு இலக்கம் 1564
சுப்பர் இலக்கம் 14
வெற்றி இலக்கங்கள் 10 28 45 50

மஹஜன சம்பத
திகதி 2021/01/08
சீட்டிழுப்பு இலக்கம் 4361
C 7 3 0 6 3 4

அத கோடிபதி
கிழமை: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 1157
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 08.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 97,019,710
வெற்றி இலக்கங்கள் 06 12 28 47 M

சனிதா
கிழமை: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 3487
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 08.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 39,536,954
வெற்றி இலக்கங்கள் 01 19 27 47 A

ராசி
சுப்பர் ஜக்பொட் 31,30,437/=
திகதி: 08.01.2021
வெற்றி வாரம்: 3038
வர்ணம்: கடும் நீலம்
வெற்றி இலக்கங்கள் 08 22 52 54 மிதுனம்
ரூ. 9,995,900

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1331
நிறம் இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 08/01/2021
தினம் வெள்ளி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் I 22 34 52 69
அடுத்த சுப்பர் ஜக்பொட் 62,187,335/=

சீட்டிழுப்பு வாரம் 674
பச்சை
08.01 2021 வெள்ளி
A 02 08 16 48
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,634,530
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் சென்ற அல்வாயை சேர்ந்தவருக்கு கொரோனா

## பல குடும்பங்கள் தனிமைப்படுத்தலில்

(யாழ்ப்பாணம்)

அல்வாய் பகுதியைச்சேர்ந்த நபர் ஒருவருக்கு மூதூரில் வைத்து மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த நபர் டிசெம்பர் 19ஆம் திகதியிலிருந்து ஜனவரி 6ஆம் திகதிவரை பருத்தித்துறை அல்வாயிலுள்ள தனது வீட்டில் தங்கியிருந்துள்ளார்.

கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் பணி நிமிர்த்தம் நேற்று முன்தினம் மூதூர் பயணித்த போதே அவருக்கு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன்பரிசோதனையில் தொற்றாளராக இனங்காணப் பட்டார்.

அவர் கோவிட் -19 சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். அவரது குடும்பம் வீட்டில் சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டது.

அத்துடன், அவரது இருபிள்ளைகளும் பருத்தித்துறை பகுதியிலுள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றில் நடாத்தப்பட்ட வகுப்புகளில் கடந்த 5ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை பங்குபற்றியுள்ளனர்.

இதனால் பாடசாலையின் நான்கு ஆசிரியர்களும் 32 மாணவர்களும்சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர். (ம-03)

காணி விற்பனை

யாழ்ப்பாணம், மானிப்பாய் மேற்கு, கட்டுடைச் சந்தியில் இருந்து நவாலி வீதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

1 பரப்பின் விலை ஐந்து இலட்சம்

( தரகர் தேவையில்லை ) (5216)

074 075 4204, 077 623 4204

CERTIFICATE IN HOTEL AND RESORT MANAGEMENT



09.01.2021 இன்று புதிய பிரிவுகள் ஆரம்பம்

- பகுதி நேர / முழு நேர கற்கை நெறி
- படிக்கும் போதே வேலை வாய்ப்பு
- வெளிநாட்டில் உயர்கல்வி தொடரும் வாய்ப்பு
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
- படித்து முடித்ததும் 100% வேலை வாய்ப்பு

G.C.E O/L உடன்

TUTION FEE 30,000/- ONLY

CTHI

CANADIAN TOURISM & HOSPITALITY INSTITUTE

1544, KKS ROAD, KONDAVIL, JAFFNA

0760579999 | 0213146171 (C-1123)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி

## மன்னாரில் பிரார்த்தனை வாரம் ஆரம்பம்

(மன்னார்)

நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் அவர்களை பொங்கலுக்கு முன்பாக இந்த அரசாங்கம் பொது மன்னிப்பிலோ அல்லது பிணையிலோ விடுதலை செய்யக் கோரி மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று தொடக்கம் எதிர்வரும் 14ம் திகதி வரை கறுப்பு மஞ்சள் கொடிகளை வீடுகளில் கட்டி மதஸ்தலங்களில் பிரார்த்தனை வாரம் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதன் முதல் நாளான நேற்று காலை ஏழு மணி முதல் மன்னார் பள்ளிமுனை மற்றும் ஈச்சளவாக்கை பகுதிகளிலும் மாலை பேசாலை பகுதியிலும் அதே நேரத்தில் வடக்கு கிழக்கில் மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள இந்து மற்றும் கிறிஸ்தவ ஆலயங்களில் கறுப்பு மஞ்சள் கொடிகளை பறக்கவிட்டும் பொங்கல் பொங்கியும் செப வழிபாடுகளுடன் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான பிரார்த்தனைகள் நடைபெற்றுவருகின்றது.

இன்றைய தினமும் மன்னார் மாவட்டம் உட்பட தமிழர் தாயக பகுதிகளில் உள்ள கிராமங்களில் பிராத்தனை வாரத்தை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ம-03.285)

# ஓட்டோவில் கஞ்சா கடத்திய மூவர் மிருசுவிலில் கைது

(வவுனியா)

வியாபார நோக்கத்துடன் சுமார் 2 லட்சம் ரூபாய் பெறுமதியான ஒரு கிலோ கிராம் கேரள கஞ்சா போதைப்பொருளை முச்சக்கர வண்டியில் கடத்திச் சென்ற மூவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்..

இந்தக் கைது நடவடிக்கை கொடிகாமம் மிருசுவிலில் நேற்று இடம்பெற்றுள்ளது.

பளையைச் சேர்ந்த இருவரும் கொக்குவிலைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஒரு கிராம் கஞ்சா போதைப்பொருள், முச்சக்கர வண்டி மற்றும் அலைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-03)

# மரண அறிவித்தல்

மலர்வு 07 – 01 – 1941



உதிர்வு 08 – 01 – 2021

## சிவசோதி பாலசுப்பிரமணியம்

### (ஓய்வுநிலை எழுதுவினைஞர்)

யாழ்ப்பாணம், சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 618, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசோதி பாலசுப்பிரமணியம் (C.S. பாலா) நேற்று (08.01.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசோதி - அகிலாண்டம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற விமல அருளேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் முத்துக்குமாரு (கனடா), பூலோகசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தசந்தன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா), வசந்தன் (Egait (PVT) Ltd), கீர்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரியா (பல் வைத்தியர் - அவுஸ்திரேலியா), றமா (வங்கி அலுவலர் - கொமர்ஷல் வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் றெவின், சிவோன் (அவுஸ்திரேலியா), திவ்வியா, கஜானன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (10.01.2021) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (5230)

077 230 0006
021 222 8033

தகவல்:- பா. வசந்தன்

காணி விற்பனை

யாழ்ப்பாணம், கோண்டாவில் இராச வீதிச் சந்திக்கு அருகாமையில் கோண்டாவில் வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும் (தரகர் தேவையில்லை) (5216)

தொடர்பு

077 505 8561
077 805 1655
077 288 0152

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

மணமகள் தேவை

1979.02.07 இல் பிறந்த 5'. 6" உயரமுடைய சைவ சமய உயர்குலம், மிருகசீரிடம், 2 ஆம் பாதம், கிரகபாவம் 6 உடைய மணமகனுக்கு அழகிய பொருத்தமான மணமகள் தேவை. (5226)

077 330 1798

விற்பனைக்கு

நல்லின பசுக்கன்று விற்பனைக்குண்டு.

விலை : 20,000 /- (C-1122)

077 663 1742

அண்ணா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= 070 3305500 075 3305500

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

ENGLISH CLASS ( PERSONAL & GROUP )

English Classes (Reading, Grammar, Writing, Speaking) for 6 to 11 (5228)

Please Contact

076 217 6366

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-1051)

0768226240 DHL

அன்பொளி கல்வியகம்

யாழ்ப்பாணம்

கல்வியாண்டு – 2021

தரம் 3, தரம் 4, தரம் 5 ZOOM வகுப்புக்கள் நடைபெறுகின்றன. மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப் பட்டுள்ளதால் இணைய விரும்பும் மாணவர்கள் 076 174 7490 எண்ணுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்துகொள்ளவும். (C-1121)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org